நீ நண்பர்களை சம்பாதித்துக் கொள்
நீ மரித்தால் நித்திய வீட்டில் (உன்னை)
நிரந்தரமாய் ஏற்றுக் கொள்வார்கள்

3. அழைத்த அழைப்பில் நிலைத்திருந்தால்
நீ அபிஷேகத்தைக் காத்துக் கொள்ளலாம்
அழைத்தவர் உண்மையுள்ளவர்
உன்னை அனுதினமும் நடத்திச் செல்வாரே

Father. S.J. பெர்க்மான்ஸ்

59.கிராமியம், நாட்டுப்புறம்

1465 (1978) R-Jive T-115 D 6/8

**தங்க கட்டியே யூத சிங்கக் குட்டியே
என் பாவம் போக்க
பொறந்திருக்கும் ஆட்டுக்குட்டியே
தங்க கட்டியே யூத சிங்கக் குட்டியே
என் மனசெல்லாம் நெறஞ்சிருக்கும்
வெல்லக்கட்டியே
தந்தானே பாட்டுப் பாடுவேனே (2)
எனக்கு எல்லாம் தந்த
இயேசுவையே பாடிடுவேனே**

1. தித்திக்கும் கொம்புத்தேனே
உம்மை எத்திக்கும் சொல்லுவேனே
ஜீவன் தந்த உம்மைத்தானே
உம்மை ஓயாமல் பாடிடுவேனே

2. நெஞ்சில் நெறஞ்ச செல்லமே
பசும் பால் போல வெள்ளை உள்ளமே
வாழவைக்கும் நல்ல தெய்வமே-உம்மை
வாழ்த்தும் போது இன்னல் நீங்குமே

3. மண்ணில் வந்த மாணிக்கமே
உம்மை கண்ட கண்கள் பூரிக்குமே
தேடி வந்த கோடி இன்பமே
உம்மை பாட பாட உள்ளம் பொங்குமே

Pas. A. ஜெயப்பிரகாஷ் (கோழி)

1466 (1981) R-Blues Ballad T-120 E 6/8

**நாங்க வலைவீசி மீன்பிடிப்பவங்க ஓ ஹைரயா
நாங்க கலிலேயா நாட்டை சேர்ந்தவங்க
இயேசு நாதருங்க எங்க நாதருங்க**

1. பாவி நானுங்க படகைவிட்டு வந்தேனுங்க
பாசம் வச்சேங்க பழைய குணம் போச்சுங்க

2. யோவான் நானுங்க யாக்கோபுக்கு தம்பிங்க
இயேசுவின் மார்பினிலே
சாய்ஞ்சு படுத்துக் கொண்டேனுங்க

3. தோமா நானுங்க சந்தேகமா இருந்தேங்க
நானும் இந்தியாவுக்கு
சுவிசேஷம் கொண்டு வந்தேங்க

4. இந்த ஊரில் இருப்பவங்க ரொம்ப ரொம்ப
நல்லவங்க இயேசுவை ஏற்றுக்
கொண்டால் இன்பமாக இருப்பீங்க

1467 (1989) R-Blues Rock T-120 Gm 6/8

**அல்லேலூயா பாட்டுக்காரங்க நாங்க
எல்லாம் இயேசப்பாவின் சொந்தக்காரங்க
சொந்தக்காரங்க எனக்கு ரொம்ப பேருங்க
இயேசப்பா அன்பினிலே வந்து பாருங்க
இருதயத்தை தந்து பாருங்க – அம்மா
வந்து பாருங்க ஐயா கொஞ்சம் கேளுங்க**

1. ஆடாத ஆட்டம் எல்லாம் ஆடி வந்தேங்க
நான் பாடாத பாட்டு எல்லாம் பாடி வந்தேங்க
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
தேடாத தெய்வம் எல்லாம் தேடி வந்தேங்க
தேடி வந்த இயேசுவையே பாடி வந்தேங்க

2. மாளிகை மாடங்களை கேட்கவில்லைங்க
உங்க பொன்னையும் பொருளையும்
கேட்கவில்லைங்க - அல்லேலூயா
கெட்டு போன இருதயத்தையே
கேட்குறாருங்க-2 - உள்ளத்திலே
இயேசு வாழ துடிக்கிறாருங்க

3. பட்டம் பதவியெல்லாம் பறந்து போகுங்க
இந்த கெட்ட குணமெல்லாம் மாறிப்போகுங்க
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
நல்ல வழி தருபவரும் இயேசு தானுங்க
அந்த வழி வேண்டுமானால் வந்து பாருங்க

Eva. ராபர்ட்

60. வாலிபர் பாடல்கள்

1468 (1994) R-16 Beat T-100 D 4/4

இயேசு எந்தன் வாழ்வின் பெலனானவர்
எனக்கென்ன ஆனந்தம்

1. எந்தன் வாலிப காலமெல்லாம்
எந்தன் வாழ்க்கையின் துணையானார்
உம் நாமமே தழைத்தோங்க
நான் பாடுவேன் உமக்காக

எந்தன் இதயமே உம்மைப் பாடும்
எந்தன் நினைவுகள் உமதாகும்

2. பெரும் தீமைகள் அகன்றோட
பொல்லா மாயைகள் மறைந்தோட
உமதாவியின் அருள் காண
வரும் காலங்கள் உமதாகும்
3. இந்த உலகத்தை நீர் படைத்தீர்
எல்லா உரிமையும் எனக்களித்தீர்
உம் நாமமே தழைத்தோங்க
நான் பாடுவேன் உமக்காக

1469 (1995) R-Raggae T-95D 4/4

மனம் சுத்தி சுத்தி வருதே தானா
இயேசு ராஜாவ இயேசு ராஜாவ
நான் உம்மை விட்டு தூரம் போனா
மனம் நல்லாயில்லே -3 (என்)
மனம் சுத்தி சுத்தி சுத்தி சுத்தி சுத்தி சுத்தி (4)

1. இயேசு தானே ஜீவனும் பெலனும்
யாருக்கு நான் இனி அஞ்சி அஞ்சி வாழணும்
2. உந்தன் வேதம் உடலுக்கு ஜீவன்
அதுவே எனக்கு - அனுதின கீதம் -2
3. தேனைப்போல பாவம் வந்தாலும்-இயேசு
திருப்தியில் எட்டி எட்டி உதைப்பேன்
4. அற்புதர் இயேசு எனக்குள் இருக்க
அனுதின தேவையின் பயமெனக்கில்லை
5. இயேசுவும் நானும் ரொம்ப ரொம்ப பொருத்தம்
சாத்தனுக்கோ இனி-ரொம்ப ரொம்ப வருத்தம்
6. இயேசுவும் நானும் ஜாடிக்கேத்த மூடி
நான் இனி தேடமாட்டேன்-வேறெ ஒரு ஜோடி

Pas. ஜெயசீலன் (மைலாடி)

1470 (1997) R-Jive T-125 E 6/8

கிதியோன் நீ கிதியோன் நீ – தேவனால்
அழைக்கப்பட்டு அனுப்பப்பட்டவன் நீ
வாலிபனே வாலிபனே – ஊழியம்
செய்திட நீ ஒப்புக்கொடுப்பாயா

1. உணவுக்குப் போராடும் தேசத்திலே
உண்மை தெய்வத்தை நீ சொல்லணுமே
விளைச்சலை கெடுக்கின்ற எதிரிகளை
விரட்டணுமே இயேசு நாமம் சொல்லி
2. தரித்திர ஆவிகளைத் துரத்தணுமே
விக்கிரக ஆவிகளை விரட்டணுமே
கர்த்தர் மனமிரங்க கதறணுமே
நாடு நலம் பெற ஜெபிக்கணுமே
3. சுயம் என்ற மண்பாண்டம் உடைத்து விடு
பயமின்றி திருவசனம் அறிக்கையிடு
மாம்சத்தைப் பலியாக ஒப்புக்கொடு
புரியாத அப்பமாக மாறிவிடு
4. இருக்கின்ற பெலத்தோடே புறப்படுபோ
எதிரியை தோற்கடித்து ஜனங்களை மீட்டிடு
படைத்தவர் உனக்குள்ளே இருப்பதனால்
பராக்கிரமசாலியே பயமே வேண்டாம்

Father. S.J. அலெக்ஸாண்டர்

1471 (1998) R-Modern 6/8 T-115 C 6/8

இளமையை இயேசுவுக்குப்
பலியாக்குவோம் - நம் வாழ்நாளை
அவருக்கு பலியாக்குவோம்
ஜீவ பலியாக்குவோம்

1. முடமாக்கும் பாவத்துக்கு முடிவு கட்டுவோம்
முழு சிந்தனையும் இயேசுவுக்கு
உரிமையாக்குவோம் - உடலாலும்
உள்ளத்தாலும் ஆராதிப்போம் - இனி
ஒருபோதும் உலகுக்கு அடிமைப்படோம்
2. நன்னாளும் முழங்காலை ஊன்றக் கட்டுவோம்
தவறான பற்றுகளை வெட்டி எறிவோம்
அறிவோடும் உணர்வோடும்
பின் பற்றுவோம் - இனி உளமாற
இயேசுவில் நாம் அன்பு கூருவோம்
3. பலிபீடத்தனல் கொண்டு
சிந்தையைத் தொடும் - துதிபாடும்
அனல்கொண்ட உள்ளம் தாரும்
விழி வைத்து எதிர் நோக்கும்
என்னைப் பாரும் - இனி பதிவாக
உம்மில் நான் நிலைப்பேன் என்றும்

FMPB

1472 (2000) R-Jive T-135 E 6/8

நம்பாதே நம்பாதே நண்பர்களை நம்பாதே

1. நாங்க இருக்கிறோம் என்று சொல்வாங்க
பிரச்சனை வந்தா ஓடிப் போவாங்க
2. அண்ணன் என்பார்கள் தம்பி என்பார்கள்
நெருக்கடி வந்தா ஓடி போவார்கள் - 2

நம்பிடு நம்பிடு இயேசுவை நீ நம்பிடு -2
போஷித்திடுவார் காத்திடுவார்
சேர்த்திடுவார் அரவணைப்பார் -2
நம்பிடு நம்பிடு இயேசுவை நீ நம்பிடு -2
நேசித்திடுவார் பெலன் தருவார்
விடுதலை தருவார் சுகம் தருவார் -2

Rev. பால் தங்கையா

1473 (2003) R-Pop Ballad T-115 Dm 2/4

ஆயிரம் ஸ்தோத்திரமே
இயேசுவே பாத்திரரே

பள்ளத்தாக்கிலே அவர் லீலி
சாரோனிலே ஓர் ரோஜா

1. வாலிப நாட்களிலே - என்னைப்
படைத்தவரை நினைத்தேன்
ஏற்றிய தீபத்தால் இதயமே நிறைந்தது
இயேசுவின் அன்பினாலே
2. சிற்றின்ப கவர்ச்சிகளை வெறுக்கும்
ஓர் இதயம் தந்தீர் - துன்பத்தின்
மிகுதியால் தோல்விகள் வந்தாலும்
ஆவியில் மகிழ்ந்திடுவேன்
3. பலவித சோதனையை சந்தோஷமாய்
நினைப்பேன்- எண்ணங்கள்
சிறையாக்கி இயேசுவுக்கு கீழ்ப்படுத்தி
விசுவாசத்தில் வளர்வேன்
4. உலக மேன்மை யாவும்
நஷ்டமாய் எண்ணிடுவேன்
சிலுவை சுமப்பதே லாபமாய் நினைத்தே
சாத்தானை முறியடிப்பேன்
5. இயேசுவின் நாமத்திலே ஜெயம்
கொடுக்கும் தேவனுக்கு
அல்லேலூயா ஸ்தோத்திரம் இயேசுவே
வாரும் என்றென்றும் உம்மில் வாழ

1474 (2004) R-Disco T-125 Dm 2/4

எதிரியை வீழ்த்திட எழும்புவோம்
அக்கினி அம்புகளாய்...
அக்கினி அம்புகளாய் மாறி
அவர்க்காய் வாழ்ந்திடுவோம் (2)

1. வீழ்ந்திடா வாழ்வை விரும்பிடுவோம் நாம்
விருப்பம் அவரே நிறைவு செய்வார் (2)
2. பலவான் கையின் அம்புகளானால்
எதையும் சாதிக்க முடிந்திடுமே
3. அழிந்திடும் மாந்தரை அறுவடை செய்ய
அவரின் பணிக்கே அர்ப்பணிப்போம்

Rev. ஸ்டேன்லி V. ஜோசப்

1475 (2005) R-Disco T-120 Em 2/4

இளைஞனே யுவதியே – ஆத்ம
பாரம் எங்கே வானத்திலும் பூமியிலும்
சகல அதிகாரம் உனக்கு உண்டே
திறமையும் தாலந்தும்
சகல தகுதியும் உனக்கு உண்டே
தயக்கம் ஏன் தாமதம் ஏன் –2
விரைந்திடு விரைந்திடு
தேவனால் ஜெயத்தைப் பெற்றிடு

1. வசந்த வாழ்விற்கு காத்து கிடக்கும்
ஜாதி ஜனங்கள் நம் மண்ணில் உண்டு
வசதிகள் பெற்றும் மயங்கி கிடக்கும்
வீதி ஜனங்கள் நம் மண்ணில் உண்டு
பாவ சாபத்தினாலே மடியும் ஜனங்கள்
நம் மண்ணில் உண்டு
இவர்கள் இயேசுவை அறிய
உன்னத பணியை செய்திடு
2. அமைதியை தேடி அலைந்து திரியும்
திரள் கோடி ஜனங்கள் நம்மில் உண்டு
ஆறுகள் நதிகள் என்று தேடும்
பக்த கோடிகள் நம்மில் உண்டு
உண்மை தெய்வத்தை அறிய
மலைகள் நாடும் ஜனம் நம்மில் உண்டு
இலவச இரட்சிப்பை அருளும்
சிலுவை செய்தி சொல்ல நீயும் உண்டு

FMPB

1476 (2006) R-Disco T-120 Em 2/4

பிரகாசிக்கும் சுடர்கள் நாம்
பிரகாசிக்கும் சுடர்கள் – இருளாம்
உலகிலே ஒளியாம் இயேசுவை (2)

1. தேவ சமுகம் காத்திருந்து பெலன் பெறுவோம்
தேவ மகிமை வெளிப்பட வாழ்த்திடுவோம்
தேவ அபிஷேகம் தேவ வல்லமை
நம்மில் உண்டு பிரகாசிப்போம்
நாள் தோறும் பிரகாசிப்போம்
2. எழும்பிடுவோம் இயேசுவுக்காய்
பிரகாசிப்போம் - இணைந்திடுவோம்
அவர் பணி செய்திடுவோம்
இந்தியர்கள் இயேசுவுக்கு சொந்தமாக
பாவ அந்தகார இருள் நீக்குவோம்-எங்கும்
ஆராதனைக் கூடம் அமைப்போம்
3. தேவ பிள்ளைகள் நாம் பலவான்
கையில் அம்புகள்-வேகம் செல்லுவோம்
சத்துருவை வீழ்த்திடுவோம் -தாவீதின்
கவணில் உள்ள கூழாங்கற்கள் நாம்
கோலியாத்தின் தலை உடைப்போம்
ஜெய கோஷமிட்டு கொண்டாடுவோம்

Pas. ரவி ராபர்ட் (சென்னை)

1477 (2007) R-Rock shuffle T-125 Dm 6/8

உயர்ந்த லட்சியம் இந்து தேவை நிச்சயம்
புதுமை ஜீவிதம் என்றும் நமது லட்சியம்
வேத வாக்குகள் நிறைவேறும் சத்தியம்
தேவ ராஜ்ஜியம் உதயமாகும் நிச்சயம்

ஹமாரா வதன் இந்தியா
ஸஹாரா ஹே பியாராமஸீ (2)

1. தேசம் தேடும் இயேசுவை
நாம் காட்ட வேண்டுமே - பாவ வாழ்வு
களைந்த தூய வாழ்வு வேண்டுமே
கலவையற்ற தூய மனம் சீர் பொருந்துமே
இனி பகைமைகளும் பிரிவுகளும்
மறைந்து போகுமே
2. வேதம் தேடும் தூய மனிதன் நீயும் ஓடிவா
தேவனோடு உடன்படிக்கை செய்ய
விரைந்து வா - போதும் என்ற பக்தி
கொண்டே நீயும் ஓடிவா - உன் சிறந்த
வாழ்வை இயேசுவுக்கு பரிசளிக்க வா

FMPB

1478 (2011) R-Disco T-120 Em 2/4

கிறிஸ்துவுக்காய் பிரகாசிப்போம்
எழுப்புதலை நாம் காண்போம் -2
காற்றடித்தாலும் புயல் வந்தாலும்
தடை வந்தாலும் பிரகாசிப்போம் -2

இது எழுப்புதலின் காலம்
நாம் செயல்படும் நேரம் -2

1. சிற்றின்ப சேற்றில் கிடந்தது போதும்
சீறி எழுவோம் பிரகாசிக்க -2
கடைசி காலம் இது தான் என்று
உணர்ந்து எழும்புவோம் பிரகாசிக்க -2

2. நமக்காய் வாழ்ந்து சுகித்தது போதும்
அவர்க்காய் எழும்புவோம் பிரகாசிக்க -2
தடைகள் தகர்ப்போம் பட்டயம் எடுப்போம்
படைபோல் எழும்புவோம் பிரகாசிக்க -2

3. விழுந்து விழுந்து எழுந்தது போதும்
வீறு கொள்வோம் பிரகாசிக்க -2
விழித்தெழுவோம் பாரம் கொள்வோம்
சுதந்தரிப்போம் பாரதத்தை

Rev. ஸ்டான்லி V. ஜோசப்

1479 (2013) R-Jive T-125 Em 6/8

ஜெயித்திடுவோம் நாங்க
எதிலும் Winner Team – ங்க

தோல்வி என்றும் இல்லை
தோல்வியே இல்லை
வெற்றி எங்கள் பக்கம்
சந்தேகம் இல்லை
பாவத்தை ஜெயித்திடுவோம்
பரிசுத்தம் காத்திடுவோம்

1. Cricket Game - ம் தோற்று போகலாம்
Hockey Team - ம் சறுக்கி போகலாம்
Medal - லத்தான் வாங்க முடியுமா
இயேசுவின் நாமத்தினால் எல்லாம் கூடும்
ஜெயிக்க முடியும் தோல்வி என்றும்

2. படிப்பிலேயும் ஜெயிப்போமுங்க
பண்பிலேயும் ஜெயிப்போமுங்க
பரவசமாய் பாட்டு பாடியே
இயேசுவின் நாமத்தினால் எல்லாம் கூடும்
ஜெயிக்க முடியும் தோல்வி என்றும்

61. பிற்சேர்க்கை பாடல்கள்

1480 R-Blue grass T-100 Gm 4/4

அப்பா இயேசப்பா...
உங்க கிருபை போதுமப்பா
உங்க கிருபை கிருபை கிருபை கிருபை

1. ஆடுகள் மேய்த்தவனை
அரசனாய் மாற்றினீரே
துதியின் சத்தம் கேட்டு
பிரியம் வைத்தீரே

2. யுத்தம் பண்ணாமலே
துதிக்கத் தொடங்கினாரே
எதிரிகள் குழப்பம் வந்தது
பிரேதங்கள் கீழே விழுந்தது

3. சிறைச்சாலை நடுவினிலே
ஜெபம் பண்ணி துதித்தாரே
சிறைச்சாலை ஆட்டம் கண்டது
கட்டுகள் அறுந்தே போனது

1481 R-Slow Rock T-105 Dm 6/8

மனந்திரும்பும் பாவிகளுக்கும் புகலிடமே
மனதுருகும் தேவன் எந்தன் மறைவிடமே
வந்தனமைய்யா வந்தனமே (2)

1. திருச்சபை நடுவில் உமது பெயரைச்
சொல்லியே பாடிடுவேன் - திருக்கரம்
செய்திட்ட நன்மை நினைக்கிறேன்
திருச்சபை நடுவில் உமது
பெயரைச் சொல்லியே
உம்முடைய செயல்களெல்லாம்
நினைக்கும் போது வியக்கிறேன்

2. இரதங்களும் குதிரைகளும் எங்களை
இரட்சிக்க முடியவில்லை - உம்மை
விட்டா எங்களுக்கு வேறே வழியில்லை
இரதங்களும் குதிரைகளும் எங்கள
இரட்சிக்க முடியவில்லை
உம்மை நம்பி வந்துவிட்டோமே
வேறொரு நாமம் அறியவில்லை

3. கர்த்தருக்குள் மகிழ்ந்திருக்கும்
பிள்ளைகளுக்கென்றும் நிம்மதியே
காத்திருந்தால் கிடைக்கும் அவரின் கிருபை
கர்த்தருக்குள் மகிழ்ந்திருக்கும்
பிள்ளைகளுக்கென்றும் நிம்மதியே
என்னை விட்டு எடுபடாத
நல்ல பங்கு அவர் சந்நிதியே

1482 R-Waltz T-160 G 3/4

துதியின் தேவனே துதிக்குப் பாத்திரர்
துதிக்கணும் உம்மை துதிக்கணும்
உள்ளம் ஏங்குதே துதிக்க விருப்பமே
துதியின் ஆவியால் நிரப்புமே
என்னை நிரப்புமே நிரப்புமே ஐயா

1. ஆலோசனைக் கர்த்தரே
அற்புதத்தின் தேவனே-ஆறுதலின்
தைலமே ஆரோக்கியம் அளிப்பீரே

2. அநாதி தேவன் நீரே-ஆபத்து
நேரத்திலே அடைக்கலமானீரே
ஆதாரம் என்றென்றுமே

1483 R-16 Beat T-90 D 4/4

1. உம்மைப் போல யாருமுண்டோ
உந்தன் அன்புக்கு நிகருமுண்டோ
தந்தை தாயும் உறவினர் கைவிட்டாலும்

அன்பாய் இயேசென்னை
அணைத்து கொள்வார்
ஆயேசுவே நீர் போதுமே
உம் அன்புக்கு நான் ஏங்குகிறேன்
இயேசுவே நீர் போதுமே
உம் அன்பின் மழையில் நனையுவேன்
(இயேசுவே நான் வந்துள்ளேன்
இன்னும் ஒருமுறை என்னை நிரப்புமே)

2. தாகமான ஆத்துமாவை
ஒரு போதும் நீர் தள்ளிவிடீர்
ஆசை காட்டி மோசம் செய் உலகினின்று
உம் அன்பொன்றே மீட்குமையா

1484 R-Beguine T-120 Cm 2/4

கானா ஊரின் கல்யாணத்தில் தானே
தெய்வ மகன் தாமே புதுமை செய்தார்
கண்டோரெல்லாம் அன்று வியந்து மகிழ
இந்நாள் வரை தொடரும் அந்த மகிமை
தெய்வ மகன் தாமே புதுமை செய்தார்

1. பசியுடன் பிணிகள் நீக்கி மகிழ்ந்தார்
நலமுடன் வாழும் வழிகள் மொழிந்தார் -2
உலகிலே அன்பின் உருவில் திகழ்ந்தார்
சிலுவையில் நமக்கு உயிரும் தந்தார் -2
ஆஹா நான் எங்கு காண்பேனோ..(2)
இயேசு என் நேசர் போல்

2. அன்புடன் பரிவும் வேண்டும் என்றார்
தாழ்மையாய் நாளும் பழகச் சொன்னார்
ஒளியுடன் வாழும் வழியைத் தந்தார்
இறுதி நாள் வரை நம் அருகில் நிற்பார்
ஆஹா நான் எங்கு காண்பேனோ..(2)
நேசர் என் இயேசு போல்

1485 R-Rock T-130 Dm 2/4

இயேசு நல்லவர் இயேசு பெரியவர்
இயேசு உன்னதர்
சர்வ லோகத்தின் ஆண்டவர் –2
நல்லவர் பெரியவர் சர்வ வல்லவர் (2)

1. வியாதியால் வருந்திடும் உனக்கு
சுகம் தரும் தெய்வம் நம் இயேசு–2
சாபங்கள் யாவையும் நீங்கி - உன்னை
வாழவைக்கும் தெய்வம் இயேசு–2

2. மரண பயம் சூழ்ந்த உன்னை
விடுவிக்க வல்லவர் இயேசு
இருண்டு போன உந்தன் வாழ்வில்
ஜீவ ஒளியை ஏற்றுவார் இயேசு

3. ஏமாற்றம் நிறைந்த உன் வாழ்வில்
புது நம்பிக்கை கொடுப்பவர் இயேசு
தோல்வியை சந்தித்த உனக்கு
ஜெயத்தை தருபவர் இயேசு

1486 R-Reggae T-85 D 2/4

கர்த்தர் செய்ய நினைத்தது
ஒன்றும் தடைபடாது – 2
தடைகளை நீக்குவார்
ஜெயத்தை தந்திடுவார் –2
ஜெயமாய் நடத்துவார்–உன்னை (2)
ஹாலேலூயா...ஹாலேலூயா(8)

1. இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே
நம் கர்த்தருக்குப் பிரியமானதே
ஆபிரகாமை ஆசீர்வதித்தவர்
உன்னையும் இன்று ஆசீர்வதிப்பார்-2
சூழ்நிலைகளைப் பார்த்து
நீ சோர்ந்து போகாதே
கர்த்தர் உன்னை உயர்த்திடுவார்-2

2. வழியே இல்லா இடங்களிலும்
புது வழியை உனக்கு உண்டாக்குவார்
இருண்டு போன உந்தன் வாழ்க்கையில்
ஜீவ ஒளியை இன்று ஏற்றிடுவார்
வாசல்கள் எல்லாம் அடைக்கப்பட்டாலும்
புது வாசல் உனக்கு திறந்திடுவார்

1487 R-Ballad T-65 F 4/4

என் வாழ்க்கையின் நடுவினிலே (முழுவதுமே)
உம் வெளிச்சம் வீசட்டுமே (2)
என் எல்லாம் நீரே (3) இயேசுவே

1. என் பிரச்சனை நடுவினிலே
உம் பாசத்தை உணரட்டுமே
என் கவலையின் நடுவினிலே
உம் கரத்தை காணட்டுமே

2. என் பயத்தின் நடுவினிலே
உம் பெலத்தை உணரட்டுமே
என் தனிமையின் நடுவினிலே
உம் தயவு தாங்கட்டுமே

1488 R-Disco T-125 F 2/4

ஓயாமல் துதிப்போம்
காலமெல்லாம் பாடுவோம்
ராஜாதி ராஜாவாம் இயேசுவையே(என்றும்)
பாடு ஓசன்னா ஓசன்னா ஓசன்னா
என்றும் ஓசன்னா ஓசன்னா ஓசன்னா

1. சத்துருவை மிதிப்பாய் எதிரி அடங்குவான்
இயேசுவே ஜெயிப்பார்
ராஜரிகம் பண்ணுவார் - நீயோ
கரங்களை தட்டியே துதித்துக்கொண்டிரு

2. கட்டுகளை அறுப்பார் சாபங்களை
முறிப்பார் - வேதனையை மாற்றுவார்
புதுபெலன் தருவார் - நீயோ
கரங்களை அசைத்து துதித்துக் கொண்டிரு

3. விண்ணப்பத்தை கேட்பார்
கிருபையை பொழிவார்
வாக்குத்தத்தம் செய்தார்

நிறைவேற்றி முடிப்பார் -நீயோ
கரங்களை உயர்த்தி துதித்துக் கொண்டிரு
Bro. சாமிர்வேல் தாமஸ்ராஜ் (சென்னை)

1489 R-Analog Pop T-85 Cm 4/4

அன்பின் முகத்தை
அன்று நான் கண்டேன்
கல்வாரி மலை மேல்
தேவ அன்பின் எல்லை
அந்த நான் கண்டேன்
கொல்கொதா மலை மேல்

தியாகத்தின் நல் ஓசையைக் கேட்டேன்
கருணையின் முகம் கண்டேன்
கல்வாரி மலைமேல் – அன்று (2)

1. தேவ திருசுதன்
அன்று அம்மலை மேல்
பாடுகள் ஏற்றதினால்
மனுக்குல பாவம் தீர்த்திடவே அவர்
சிதைந்து மாண்டதினால் ஓ... ஓ...

2. இரட்சகர் இயேசு
அன்று அம்மலை மேல்
இரத்தம் சிந்தினதால்
திரு கால் கரங்கள் மூன்றாணிகளால்
துளைக்கத் தொங்கினதால் ஓ... ஓ...

1490 R-Karnatic T-95 E 4/4

சர்வேஸ்வரா உம் சந்நிதியில் நான்
சர்வம் மறந்து பாடிடுவேன்
அளவில்லா அன்பினை
உலகினில் பகர்ந்திடும்
சங்கீதமாய் நான் மாறிடுவேன்

1. புழுதுகளுள்ள சிற்பம் நான் என்னை
பரிசுத்தனே உமக்கு அர்ப்பணித்தேன்
திருக்கரத்தால் என்னை வனைந்திடுமே
உந்தன் திரு உரு அளித்திடுமே

2. ஒரு நாளும் உன்னை பிரியேன் என்று
ஒரு நாள் கூறினீர் காதுகளில்
அழகிய உம் முகம் உள்ளத்தில் என்றும்
அழியா நினைவுகளாய்

1491 R-Disco T-115 F 2/4

உந்தன் பாதம் சரணடைந்தேன்
என்னை ஏற்றுக் கொள்ளும் தேவா (2)
கருணை தனை உருவாகவே
கொண்ட இயேசு மகா ராஜனே

1. பொருள் தேடி அலைந்த காலங்களில்
மெய்ப்பொருள் உம்மை மறந்து போனேன்
அருள் வேண்டும் எந்தன் பிரார்த்தனையை
கேட்டு பதில் தாரும் என் இயேசுவே
ஒளியான நாதா ஒளி வீசச் செய்யும்
எளிதான என் ஜெப வேண்டுதலில்

2. ஆவியின் வரங்கள் வேண்டுகிறேன்
குறைவான எந்தன் வாழ்க்கையிலே
பூமியின் வரங்கள் வேண்டாமையா
நிலையற்ற இந்த ஜீவியத்தில்
ஆத்மாவில் வாரும் ஆத்மாவைத் தாரும்
வருகை வரும் அந்த நாள் வரைக்கும்

1492 R-16 Beat Ballad T-85 Dm 4/4

கனிவின் கரம் எனைத் தாங்கிட
நான் அஞ்சிடேன் – அருள் உலகின்
பயணங்களில் நீர் என்னுடன்
வரும் போது உம் சமுகம்
அருள் வேண்டும் எந்தன் ஜெயம் –2
வாரும் என் தேவா என வேண்டி
நானிருக்க – நீர் இல்லா நாளும்
நாளில்லை என் நினைக்க

1. என்ன ஆனாலும் உந்தன் அன்பில்
என்றும் நீர் என்னை சேர்த்திடுவாய்
ஜீவனானாலும் மரணமானாலும்
உம்மில் நிலைத்து நானிருப்பேன்
உம்முகம் நோக்கி அலைகளைக் கடப்பேன்
உம் நாமம் உச்சரித்து உயிர் பெறுவேன்
காலமெல்லாம் உமைத் துதித்து
நன்றிகளை ஏறெடுப்பேன் -2

2. வானம் பூமி மாறினாலும்
என்றும் மாறா நல் நேசரே
வக்குத்தத்தம் தந்த தேவா
இன்றும் காக்கும் நல் நாயகா
உம்நாமம் கொண்டு சாத்தானை வெல்வேன்
உம் இரத்தம் கொண்டு ஜெயித்திடுவேன்
வாழ்நாளெல்லாம் உமைப் புகழ்வேன்
நன்றிகளை ஏறெடுப்பேன்

1493 R-Ballad T-105 E 4/4

எனை தந்தேனே நாதா உமக்காகவே
என் உடலும் உள் உயிரும்
உமக்காகத்தான் –2

ஏற்றுக்கொண்டு அலங்கரியுமே
முழுதாக மாற்றிடும் தேவா –2

1. மனம் துவண்ட நேரங்கள் ஆறுதலின்
தேவனன்றோ-கனம் நிறையும்
இதயத்தை காற்றாக மாற்றினீரே -2
ஏதளித்து ஈடு செய்ய
நீர் செய்யும் உதவிகளை
பணம் பொன்னும் கொடுத்தாலும்
ஈடு செய்தல் இயலாது -2

2. அளவில்லா அன்பினால்
அடியேனை ஆண்டு கொண்டீர்
ஆழங்களிலினின்று
பாவி என்னை மீட்டுக்கொண்டீர்
ஏதளித்து ஈடு செய்வேன்
மாதேவன் உம் அன்பை
என்னென்ன கொடுத்தாலும்
ஈடு செய்தல் இயலாது

1494 R-Pop Bossa T-130 D 4/4

பூமியின் குடிகளே எல்லோரும் கர்த்தரை
கெம்பீரமாகவே பாடுங்களே

1. சாரோனின் ரோஜா இவர்
பள்ளத்தாக்கின் லீலியே
பரிசுத்தர் என் நேசரிவர்
பதினாயிரங்களில் சிறந்தோர்

2. வார்த்தையில் உண்மையுள்ளோர்
வாக்குத்தத்தம் செய்திட்டார்
கலங்காதே திகையாதே
ஜெயம் ஈந்து உன்னை நடத்துவார்

1495 R-Swing Reggae T-90 G 4/4

1. இன்ப நேசர் இயேசுவே உந்தன் நேசமே
திராட்சரசம் பார்க்கிலும் மதுரமானதே
உந்தன் நாமம் ஊற்றுண்ட பரிமளமே
என் மன மகிழ்ச்சி நீர் மணவாளனே

வாரீர் கல்வாரி மாறா நேசத்தை
அன்பர் இயேசுவில் பாரீர்

2. இன்ப நேசர் இயேசுவே மணவாளனே
உந்தன் நேச கொடி
என் மேல் பறந்திடுதே - உந்தன்
தூய நேசத்தால் எந்தன் உள்ளத்தை
கவர்ந்து கொண்டீரே என் மணவாளனே

3. இன்ப நேசர் இயேசுவே என்னுடையவர்
உமது கை நிதம் என்னை
அணைக்கின்றதே - என்னை உந்தன்
இதயத்தில் முத்திரையைப் போல்
பதித்துக் கொண்டீரே என் மணவாளனே

1496

அனைத்தையும் அருளிடும்
எனக்கென தந்திடும் – வலக்கரம்
என்னை உயர்த்திடும் என் தேவனே
யேகோவாயீரே (2)

1. செட்டையின் மறைவில் அடைக்கலம்
தீங்குகள் நேராமல் காத்திடும்
கழுகினைப் போல் என்னை சுமந்திடும்
என் தேவனே

2. சிலுவையில் எந்தன் நோய்களை
சுமந்தீர் உந்தன் சரீரத்தில்–அன்றே
நான் சுகமானேனே என் தேவனே

3. தேவனால் பிறந்தவன் எவனுமே
உலகத்தை ஜெயிப்பவன் என்றுமே
மலைகளையும் பதராக்குவேன்
என் தேவனே

1497 R-French House T-139 Em 4/4

ஆராதனை செய்யும் நேரம்
அப்பாவின் சந்தோஷ நேரம் –2

ஆராதனை ஆராதனை (4)

1. கண்களின் விருப்பமே
ஆராதனை ஆராதனை
பலத்தின் முக்கியமே
ஆராதனை ஆராதனை -2
அலங்கார மகிழ்ச்சியே ஆராதனை
ஆத்தும வாஞ்சையே ஆராதனை -2

2. ஆதார துருகமே ஆராதனை ஆராதனை
அடைக்கலப் பட்டணமே
ஆராதனை ஆராதனை
ஆருயிர் தோழரே ஆராதனை
அனுகூல துணையே ஆராதனை

3. நேசத்தின் உச்சிதமே
ஆராதனை ஆராதனை
பாசத்தின் பர்வதமே
ஆராதனை ஆராதனை
உருக்கத்தின் சிகரமே ஆராதனை
ஆசீர்வாத மழையே ஆராதனை

4. ஏழையின் பெலனே
ஆராதனை ஆராதனை
எளியோரின் திடனே
ஆராதனை ஆராதனை
பெருவெள்ள அணையே ஆராதனை
வெயிலுக்கு நிழலே ஆராதனை

Rev. மெல்வின் மனாசே

1498

நேசரை நான் காணப் போகவே
ஆவலோடு காத்திருக்கிறேன்
ஆலயத்தில் பணிந்து தொழுகவே
ஆசையோடு காத்திருக்கிறேன்

என்மனம் பொங்கி வந்ததே
ஏங்கி ஏங்கி வாஞ்சிக்கின்றதே

1. அங்கு நடனமாடுவேன்
நான் போற்றி பாடுவேன்
அவர் செய்த நன்மைகள்
நான் எண்ணி துதிப்பேன்
ஓசையுள்ள கைத்தாளத்தோடு
ஆடிப் பாடி ஸ்தோத்திரிப்பேன்

2. அங்கு கவலையில்லையே
கண்ணீரில்லையே
அங்கு வியாதி இல்லையே
எந்த வருத்தமில்லையே
அவர் சமுகத்தில் ஆனந்தமே
ஆனந்தம் பேரானந்தமே

1499 R-Rock Shuffle T-140 Gm 6/8

இந்தியாவின் எல்லையெங்கும்
இயேசுவைச் சொல்ல வேண்டும்
அவரை உயர்த்த வேண்டும் எழும்புவோம்

1. சபைகளே எழும்பிடுவோம்
ஒன்று கூடி ஜெயித்திடுவோம்
சிங்கங்களை கிழித்திடுவோம்
சீறும் பாம்பை மிதித்திடுவோம்

2. வாலிபரே எழும்பிடுவோம்
சாட்சிகளாய் வாழ்ந்திடுவோம்
சேனையாக புறப்படுவோம்
இயேசுவுக்காய் சுடர் விடுவோம்

3. தேவனுக்காய் எழும்பிடுவோம்
ஜீவனையே கொடுத்திடுவோம்
மலைகளை பெயர்த்திடுவோம்
சிலுவை கொடி உயர்த்திடுவோம்

1500 R-Waltz T-150 G 3/4

அல்லேலூயா அல்லேலூயா
ஏல்ஷடாய் எபனேசர் அல்லேலூயா

1. ஜோதியாய் வந்தவரே சொந்தமானீரே
ஆதியும் அந்தமும் நீரே அல்லேலூயா

2. தாபரம் நீர்தானையா தாரகம் நீர்தானையா
வாழ்விலும் தாழ்விலும் அல்லேலூயா

3. ராஜாதி ராஜன் நீரே சர்வமும் நீர்தானையா
தேவனும் ஜீவனும் அல்லேலூயா

Rev. டட்லி தங்கையா

1501 R-6/8 Blues T-100 Dm 6/8

கர்த்தரை தெய்வமாய் கொண்ட ஜனம்
பாக்கியவான் (2) என்றெண்ணப்படும்
கர்த்தரை நம்புவோம் கர்த்தரை பணிவோம்
துதி பாடுவோம் பாடி போற்றுவோம் – 2

1. எமது பிள்ளைகள் இளமையிலே
ஓங்கி வளரும் விருட்சம் போலிருப்பார்
வேதனையின் அழுகுரலோ
வீதிகளில் கேட்பதில்லை
ஏனெனில் நாங்கள் கர்த்தரின் ஜனம் (3)

2. பாவம் சாபம் நீங்க பெற்றோம்
இயேசு குருதியினால் மீட்படைந்தோம்
சித்தமதைச் செய்திடுவோம்
வருகையில் சேர்ந்திடுவோம்
ஏனெனில் நாங்கள் கர்த்தரின் ஜனம்

2. எகிப்தின் அடிமை வாழ்ந்தாலும்
கானான் தேசம் சுதந்தரிப்போம்
செங்கடலைத் தாண்டிடுவோம்
எரிகோவை வீழ்த்திடுவோம்
ஏனெனில் நாங்கள் கர்த்தரின் ஜனம்

1502 R-Swing Reggae T-105 Dm 4/4

இருளிலிருந்து வெளிச்சத்திற்கு
என்னை அழைத்தவரே
பாவம் மன்னித்து மாபெரும்
இரட்சிப்பை எனக்கு தந்தவரே

அதிகாலை உந்தன் சமுகம்
வாஞ்சிப்பேன் எனக்கது இன்பம்–உந்தன்
வார்த்தையை தியானம் செய்வேன்
உந்தன் நோக்கத்திற்காய் வாழ்வேன்

1. உனக்கு விரோதமாய் எழும்பும்
ஆயுதம் வாய்க்காதே போகும்
ஒரு வழியாய் வரும் எதிரிகள்
ஏழு வழியாய் ஓடிப் போவார்கள்
எந்தன் நம்பிக்கை உந்தன் வார்த்தையிலே
அதனால் என்றும் ஜெயிப்பேன் வாழ்க்கையிலே

2. உன்னை விட்டு விலகுவதில்லை-நான்
உன்னை என்றும் கைவிடுவதில்லை
உள்ளங்கைகளில் உன்னை வரைந்தேன்
உன்னை நான் என்றும் மறப்பதில்லை
செடி உம்மில் என்றும் நிலைத்திருப்பேன்
நான் கொடியாய் வாழ்ந்து கனி கொடுப்பேன்

3. என் கிருபை உனக்குப் போதும்
நீயும் ஆசீர்வாதமாய் இருப்பாய்
மலைகள் விலகும் பர்வதங்கள் அகலும்
என் கிருபை உன்னை விட்டு விலகாதே
நீயும் கீழாக மாட்டாய் என்றவரே
என்னை மேலாக உயர்த்திய நல்லவரே

Sis. பெர்சிஸ் அம்பிகா

1503 R-Disco T-136 Dm 2/4

ஓகோ கோ... ஓசன்னா அல்லேலூயா (3)
நம் ராஜா வருகின்றார் –2

நம் இயேசு ராஜா தூதர்களோடு
எருசலேமுக்கு வருகின்றார்
ஆயிரம் வருடம் சாத்தானைக் கட்டி
ஆளுகை செய்திடுவார் –2

சாத்தானின் ராஜ்ஜியம் அழிந்திடுமே
மரித்தவர் உயிர்த்தெழுந்து முன் செல்வாரே
அழியாத ராஜ்ஜியம் அமைந்திடுமே -2
நம் ராஜா வருகின்றார்

Pas. ஆண்ட்ரு பிரகாசம்

1504 R-Guitar Ballad T-85 F 4/4

தாயினும் மேலாய் என் மேல்
அன்பு வைத்தவர் நீரே
ஒரு தந்தையைப்போல என்னையும்
ஆற்றித் தேற்றிடுவீரே–2

என் உயிரோடு கலந்தவரே
உம் உறவாலே மகிழ்ந்திடுவேன் – 2
உம் மேல் அன்பு வைத்தேன் – நான்
உமக்காய் எதையும் செய்வேன்

1. கைவிடப்பட்ட நேரங்களெல்லாம்
உம் கரம் பிடிப்பேன்
எனைக் காக்கும் கரமதை
நழுவ விடாமல் முத்தம் செய்வேன்

2. எந்தன் கால்கள் இடறும்போது
விழுந்திட மாட்டேன் - உம்
தோளின் மீது ஏறிக்கொண்டு
பயணம் செய்வேன்

1505 R-Polka T-125 G 2/4

1. கர்த்தருக்கு காத்திருந்து கழுகு போல்
பெலனடைந்து - செட்டைகளை அடித்து
உயரே எழும்பிடுவாய்

புது பெலன் அடைந்திடுவாய் நீ (8)

2. தாகமுள்ளவன் மேல்
ஆவியை ஊற்றிடுவார்-வறண்ட
நிலத்தின் மேல் தண்ணீரை ஊற்றிடுவார்

3. சாத்தானின் கோட்டைகளை
சத்தியத்தால் தகர்ப்பாய்-சிலுவையை
சுமந்திடுவாய் ஜெயக்கொடி ஏற்றிடுவாய்

4. கர்த்தரில் பெலனடையும்
பாக்கியம் பெற்றிடுவாய்-பெலத்தின் மேல்
பெலனடைந்து சீயோனுக்கு வருவாய்

Bro. S. மோசஸ் (One day)

1506 R-Soft Fusion T-80 D 4/4

புரத்திலுள்ள எங்கள் பிதாவே
உம் ராஜ்யம் வருக உம் சித்தம் நிறைவேற
நீர் இல்லா உலகம் வெறுமையதே
அற்பமும் குப்பையுமதே
நீர் இல்லா வாழ்க்கை சுமையானதே
வாரும் தேவா இந்த வேளை

1. மன்னியும் எங்கள் மீறுதல்களை
நீக்கிடும் எங்கள் ஏக்கங்களை நீர்
பிறரின் குறைகள் பாராமல் நாங்கள்
கிருபையிலே என்றும் நிலைத்திடவே

2. காத்திடும் தீய சூழ்நிலையிலே
நிரப்பிடும் உந்தன் ஆவியால் இன்றே
சாத்தானின் சூழ்ச்சிகள்
உலகத்தின் நிந்தைகள்
எல்லாவற்றையும் ஜெயித்திடவே

Pas. பிரெம்ஸி எபனேசர்

1507

பனித்துளியாய் பெரும் மழையாய்
வல்லமையாய் வாரும் ஆவியே -2
இடிமுழக்கமாய் பெரும் அக்கினியாய்
வல்லமையாய் வாரும் ஆவியே -2

ஆவியானவரே... ஆவியானவரே (6)

Pas. ஜேம்ஸ் எட்வர்டு

1508

வருகிறேன் கிருபாசனம் தேடி
பணிகிறேன் ராஜாதி ராஜா முன் -2
இயேசுவே ஆட்டுக்குட்டியே
நன்றி இரத்தத்திற்காய்
இயேசுவே ஆட்டுக்குட்டியே
நன்றி உம் தழும்புகளுக்காய் -2
நன்றி உம் இரத்தத்திற்காய்
என்னை பனி போல் வெண்மையாக்கிடும்
நன்றி உம் தழும்புகட்காய்
என்னை பூரண சுகமாக்கிடும் -2

உம் தழும்புகளால் குணமாகிறோம் (2)
உம் காயங்களால் உம் நாமத்தினால்
உம் வார்த்தையினால் சுகமாகிறோம் -2

I come before The throne of Grace
I bow before The king of kings-2
Jesus Lamb of God
Thank you for your Blood
Jesus Lamb of God
Thank you for your Stripes
Thank you for your blood
That washes white as snow
Thank you for your stripes
That heals us from all the sickness-2

Pas. ஜேம்ஸ் எட்வர்டு

1509

நீரே என் அடைக்கலம் நீரே என் உறைவிடம்
நீரே என் மறைவிடம் என் நிழலும் நீரே -2
நீரே... இயேசுவே நீரே... இயேசுவே

1. கடும் வெயிலில் குளிர் நிழலே
புயல் காற்றில் என் புகலிடமே -2
தடுமாறும் படகின் கலங்கரை விளக்கே (2)
அலைமோதும் என் வாழ்வின் நங்கூரமே(2)

2. அமர்ந்த நீரோடை அருகினிலே
நடத்திடும் எங்கள் நல் மேய்ப்பரே
மரண இருளில் நான் நடந்தாலும்
ஆத்துமாவை மீட்டு காப்பவரே

Pas. ஜேம்ஸ் எட்வர்டு

1510

மீண்டும் பாவியாய்
உம் சமுகத்தில் வந்துள்ளேன்
மீண்டும் சிலுவையில்
உம்மை அறைந்திட்ட பாவி நான்
உம் பிள்ளை என்று சொல்ல
ஒரு தகுதியும் என்னிலில்லை
திரும்பி வருகிறேன் மனந்திரும்பி வருகிறேன்

1. அப்பா என்று சொல்ல தகுதியில்லை-உம்
வேலைக்காரனாய் என்னை சேர்த்துகொள்ளுமே
அடிமை மீதும் அன்பு கூரும் பேரன்பே
திரும்பி வருகிறேன் மனந்திரும்பி வருகிறேன்

உம் வீட்டில் ஒரு மூலையில்
இடம் தந்தால் போதும்
உம் இதயத்தில் ஒரு ஓரத்தில்
இடம் தந்தால் போதும்

2. அப்பா வீட்டில் ஆகாரத்தில் பஞ்சமில்லை
நானோ பசியால் வாடுகிறேன்
அடிமையையும் போஷிக்கும் பேரன்பே
திரும்பி வருகிறேன் மனந்திரும்பி வருகிறேன்

Pas. ஜேம்ஸ் எட்வர்டு

1511

1. உம் பாதம் வந்து நிற்கிறோம்
கிருபை தாரும் தேவனே
நீரே எங்கள் வாஞ்சையே
நீரே தேவை தேவனே -2

உம்மை பாடுவேன் உம்மை துதிப்பேன்
உம்மை உயர்த்துவேன் ஆராதிப்பேன்-2
ஆராதனை ஆராதனை (4)

2. உம் பாதம் பணிந்தேன் தந்தையே
மகிமை கனத்தை செலுத்துகிறேன்
ஆட்டுக்குட்டியானவரே
பாத்திரர் நீர் என்று சொல்வேன்

3. என்னை ஏற்றுக்கொள்ளும் இயேசுவே
வெறுமையாய் வந்துள்ளேன்
என் ஆவி ஆத்மா சரீரமெல்லாம்
பலியாய் தருகிறேன்

Pas. ஜேம்ஸ் எட்வர்டு

1512

உம்மை நம்பி வந்தேன் நான் வெட்கப்படல
உம் தயை என்னை கைவிடல
வெறுங்கையாய் நான் கடந்து வந்தேன்
இரு பரிவாரங்கள் எனக்கு தந்தீர்

ஏல் எல்லோக்கே (3)
உம்மை துதிப்பேன்

1. காயப்பட்டு நின்றேன் கண்ணீரில் சென்றேன்
கலங்கின எனக்காக இரங்கி வந்தீர்
உடன்படிக்கை என்னோடு செய்து இழந்திட்ட
யாவையும் திரும்பத் தந்தீர்

2. வேண்டினோரெல்லாம் விடைபெற்ற போதும்
வேண்டியதெல்லாம் எனக்கு தந்தீர்
பரதேசியாய் நான் தங்கினதை
சுதந்திரமாக மாற்றித் தந்தீர்

Pas. ஜான் ஜெயராஜ்

1513

மன்னாதி மன்னனே உன்னத தெய்வமே
மண்ணான என்னையே மறுரூபமாக்கினீர்

1. உந்தன் இரத்தம் சிந்தினீர்
எந்தன் வாழ்வை மாற்றினீர் - என்னை
உந்தன் சொந்தமாக ஏற்றுக்கொண்டீர்
எந்த நாளும் போற்றுவேன்
உம்மை வாழ்த்தி வணங்குவேன்
உந்தன் அன்பை என்றும் கூறிடுவேன்

2. எந்தன் சோர்வு நேரத்தில்
உந்தன் மார்பில் சாருவேன்-எந்தன்
கைகள் தளர்ந்தாலும் பெலன் தந்தீர்
கரம் நீட்டித் தூக்கினீர்
கண்ணீர் யாவும் மாற்றினீர்-எந்த நாளும்
உம்மைத் துதிப்பேன் ஆண்டவரே

3. நீரே எந்தன் நம்பிக்கை
நீங்கா நித்தியக் கன்மலை
எனக்கெதிராகப் பலர் பேசினாலும்
உம்மைப் பற்றி வாழுவேன்
உந்தன் சித்தம் செய்திடுவேன்
உம் வேதம் சொல்லும்
கட்டளையை கைக்கொள்ளுவேன்

1514

புதுப்பாட்டு பாடு ஜெயத்தோடு பாடு
பரலோகம் இறங்கிடுமே
சந்தோஷத்தோடு கர்த்தருக்காய் பாடு
கவலைகள் நீங்கிடுமே!
ஆஹா ஹா.... ஆஹா ஹா....

1. பெயர் சொல்லி அழைத்தார்
கரத்தினால் அணைத்தார்
அக்னியின் ஜீவாலை அழிக்காது காத்தார்
தண்ணீரைக் கடந்தாலும்
என்னைத் தூக்கினார்
கண்ணீரில் நனைந்தாலும்
என்னைத் தாங்கினார்

2. காரிருள் சூழ்ந்தும் பயம் ஒன்றும் இல்லை
நெரிந்த என் வாழ்வு முறிவதுமில்லை
அவர் நாம மகிமைக்காக உயர்த்திடுவார்
களிமண் நான் அவர்
நாமம் உயர்த்திடுவேன்

3. நாற்றமுள்ள வாழ்க்கை நறுமணமாகும்
அக்கிரமம் நீக்கி பசும் பொன்னாய் மாறும்
புது எண்ணெய் அபிஷேகம் ஊற்றிடுவார்
கனியுள்ள வாழ்க்கையாய் மாற்றிடுவார்

1515

எழுப்புதலின் புதிய காலம்
தொடங்கி விட்டது செழுமையான
நாட்கள் இன்று மலர்ந்து விட்டது –2
வெற்றி வேந்தன் முன்னே
வீர நாமம் பின்னே
கரம் பிடித்த கர்த்தரை நாம்
தொடர்ந்து செல்வோம்
அல்லேலூ அல்லேலூ அல்லேலூயா–3

1. அதிசயங்கள் காணப் போகும்
ஆண்டு இதுதான்
சுகவாழ்வு துளிர்க்கப் போகும்
வருஷம் இதுதான்
துக்க காலம் முடிந்து போகும்
காலம் இதுதான்
தூய தேவன் ஆசீர் தரும் நேரம் இதுதான்

2. தண்ணீரைக் கடக்கும் போது தப்புவிப்பார்
சோதனைகள் வரும் போது தப்புவிப்பார்
கர்த்தர் வெளிச்சம் உன்மேல் உதித்து விட்டது
காரிருளும் உன்னை கண்டு அஞ்சி ஓடுது
மக்கள் வெள்ளம் மந்தையைப் போல
பெருகப் போகுது-மன்னன் இயேசு
நாமத்தையே புகழப் போகுது
தேவ தூதர் எக்காளம் காதில் கேட்குது
தேவ ஜனம் கர்த்தரோடு செல்லப் போகுது

1516

தேவ பாதையில் என்னை நடத்தும்
தேவ ஆவியே என்னை நடத்தும்

உந்தன் பாதையில் நான் நடந்தால்
எந்தன் பாதைகள் வாய்க்கும்
அல்லேலூயா ! (2)

1. உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது
வனாந்திர தாபரங்களிலும் பொழிகிறது
2. உமது பாதைகள் நெருக்கமானவைகள்
ஜீவனுக்கு போகின்ற வாசல் சென்றடையும்
3. உமது பாதைகள் சத்தியமானவைகள்
இதயத்தில் வசனமுள்ளோர்
நடைகள் பிசகாதே
4. உமது பாதைகள் பரிசுத்தமானவைகள்
பரிசுத்த ஆவியினால் சுத்தமாவோம்

Bro. F. ஊரமண்ட்

1517 R-Love song T-80 D 4/4

1. என் தேவனால்
முடியாதது ஒன்றுமில்லையே
தம் நாமத்தினால் கூடுமே எல்லாம் எல்லாம்
வல்லவர் சொன்னால் எல்லாம் ஆகும்
இல்லை வேறில்லை நாமம்
வன்மதில்போலுல்ல துன்பமும்
வன்கரத்தால் நீங்கிடும்
நேர்மையின் வழியில் நடந்தால்
நன்மைகள் தினமும் தருவாரே-2

உண்மையுள்ளவர் நீதிமான்
கர்த்தர் மேலானவர்

2. என் இயேசுவின் நாமத்தால்
குணமாகாததாம்
கொடும் வியாதி வேதனை
ஏதுண்டு இல்லை இல்லை -2
வசனம் விடுதலை தந்திடும்
விண்ணப்பம் கேட்பவரே-2
புலம்பும் இதயத்தை காண்பவர்
புதிய வழி காட்டுவார்
வழுவாமல் என்றும் தாங்குவார் - தம்
வலுவான கரங்களால் அணைப்பார்
உண்மையுள்ளவர்
சேனைகளின் கர்த்தரே

Eva. J.V.பீட்டர்

1518

இயேசென்னும் நாமம் ஏழேழு திசைக்கும்
பரவிட செய்யணுமே
இயேசப்பா பேரு ஏழேழு உலகில்
எழுப்புதல் அடையணுமே-2
கிருபைகள் கிருபைகள் கிடைத்திடவே
வல்லமை நம்மீது இறங்கிடவே-2
இலவசமாக இரட்சிப்பை அடைய
தினந்தோறும் ஜெபிக்கணுமே

1. நீ வசனத்தில் வாழ்ந்திருந்தால்
அது இயேசப்பா விருப்பமப்பா-2
சும்மா பேருக்கு வாழ்ந்திருந்தால்
அது அவர் மனம் வெறுப்பதப்பா-2
2. நீ பரலோக வாழ்வடைய
அந்த பரமனை நினைத்திடப்பா
நீ இயேசென்னும் நாமத்தினால்
இரட்சிப்பை அடைந்திடப்பா
3. நீ ஆவியிலே நிரம்பி
நல்ல ஆராதனை செய்யணும்
எல்லா கவலைகளை மறந்து
நீ அப்பாவை தொழுது கொள்ளணும்

Eva. கன்மலை ஜோசப்

1519 R-Jive T-140 F 6/8

1. துதிகளின் மத்தியில் வாசம்
செய்யும் இயேசுவே
துதித்திடுவோம் துதித்திடுவோம்
பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே

உம்மையே என்றுமே வாழ்த்திடுவோம்
வானமும் பூமியுமே
சமுத்திர அலைகளுமே

2. உம்மையே என்றுமே துதிக்கும்
நானும் உம்மை துதிப்பேன்
இயேசுவே ஸ்தோத்திரம் (2)
என்றென்றும் ஸ்தோத்திரமே
3. பாவங்கள் சாபங்கள்
மீறுதல்கள் யாவையுமே
மேகத்தை போலவே நீக்கினார்
என்னை மீட்டுக்கொண்டார்
4. ஒவ்வொரு நாளிலுமே
அற்புதமாய் நடத்துகின்றார்
தேவைகள் யாவையும் சந்திப்பார்
தேவனே உம்மையே துதிப்பேன்

Pas. ஐசக் அனாய்ஸ்டஸ்

1520

மா தூய மன்னவா போற்றி
மா மறை தந்தவா போற்றி
மா பெரும் ஒளியே போற்றி
மா ஜீவ வழியே போற்றி

இயேசு என் தேவா
என் நாதா உம்மைப் போற்றி -2
தொழுவோம் இயேசுவை
பணிவோம் இயேசுவை
இயேசு என் தேவா
என் நாதா உம்மைப் போற்றி -2

1. பூலோகம் மாண்புறவே
மேலோகம் துறந்து வந்தீர்
தன்னை ஜீவ பலியாய்
தந்த தேவா உம்மைப் போற்றி
மகிமை உமக்கே மாட்சிமை உமக்கே
2. ஆராதனை செய்வோமே
ஆண்டவர் இயேசுவையே

அன்புடன் என்னை பேர் சொல்லி
அழைத்த தேவா உம்மைப் போற்றி
மகிமை உமக்கே மாட்சிமை உமக்கே

1521

மேகங்கள் நடுவே வருவார்
ராஜாதி ராஜனாய் வருவார்
பாடுங்களேன் வாழ்த்துங்களேன்
இயேசு ராஜாவைப் போற்றுங்களேன்

1. இரட்சகராக வந்தாரே - இப்போ
நியாயாதிபதியாக வருவாரே
மானிடனே நீயும் மனந்திரும்பு
இன்றே உனக்கு இரட்சண்ய நாள்
2. பூமியில் அதிர்ச்சி உண்டாகுதே
கடலின் சீற்றம் பெரிதானதே
இயேசு சொன்ன வார்த்தைகளும்
கடைசி நாட்களில் நிறைவேறுதே
3. இயேசு ராஜனின் வருகையிலே
நீ எங்கே நிற்பாய் சகோதரனே?
நித்திய நித்திய காலமாக
அவருடன் சென்று வாழ்ந்திடலாம்

1522

என் ஆவியை நான் ஊற்றிடுவேன்
உன் சந்ததியின் மேல் நான் ஊற்றிடுவேன்
என் ஆசீர்வாதம் நான் பொழிந்திடுவேன்
உன் பிள்ளைகள் மீதே நான் பொழிந்திடுவேன்
நீ ஆசீர்வாதமாயிருப்பாய் (4)

1. வல்லமை வரங்களைத் தந்திடுவேன்
ஆவியின் கனியால் நிரப்பிடுவேன்
எனக்கு சாட்சியாய் வாழ்ந்திடுவாய்
எனக்கு கனிகள் தந்திடுவாய்
2. நோய்கள் யாவும் விலக்கிடுவேன்
சந்தோஷ வாழ்வு நல்கிடுவேன்
பெலவீனம் யாவும் போக்கிடுவேன்
புது பெலன் உனக்கு தந்திடுவேன்
3. கையின் பிரயாசம் பெருகச் செய்வேன்
கடன் தொல்லை யாவும் நீக்கிடுவேன்
வறுமையின் நாட்கள் முடிந்து விடும்
செழிப்பின் நாட்கள் வந்து விடும்

1523

என்னவென்று சொல்லுவேன் ஆஹா
என்னவென்று சொல்லுவேன்
என் நேசர் என்னிடம் பேசும் மொழிகளை
என்னவென்று சொல்வேன் – அது

1. இரத்தம் சிந்தி என்னை சுத்தம்
செய்ததை - என்னவென்று சொல்வேன்
இருள் பயண வேளையில் கூட வந்ததை
என்னவென்று சொல்வேன்
கண்ணீர் சிந்தும் என்னை ஏந்திக்
கொண்டதை என்னவென்று சொல்வேன்
என் கதையை கேட்டு கலங்காதே
என்றாரே-என்னவென்று சொல்வேன்
2. வாசலண்டையில் வந்து நின்றதை
என்னவென்று சொல்வேன்
அவர் வார்த்தை கேட்டு நான் ஓடி வந்ததை
என்னவென்று சொல்வேன்
அள்ளி அள்ளி என்னை முத்தம் செய்ததை
என்னவென்று சொல்வேன்
என் அன்பின் விருந்திலே கலந்து
கொண்டதை-என்னவென்று சொல்வேன்
3. உண்மையுள்ளவன் என்று சொன்னதை
என்னவென்று சொல்வேன்
அவர் உள்ளங்கைகளில் வரைந்து
வைத்ததை-என்னவென்று சொல்லுவேன்
உள்ளம் கொள்ளை கொள்ளும் அன்பு
வைத்ததை - என்னவென்று சொல்வேன்
என்னவென்று சொல்வேன்
என் உயிரில் உயிராக கலந்து விட்டதை
என்னவென்று சொல்வேன்

1524

திறந்த வாசலை எனக்குத் தந்தார்
ஒருவரும் பூட்ட முடியாதே
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா–4

1. ஜெயத்தைத் தந்திடுவார்
ஜெயமாய் நடத்திடுவார்
அவர் நல்லவரே அவர் வல்லவரே-என்னை
நடத்தும் பாதையெல்லாம் அதிசயமே
2. என்னோடு இருக்கின்றார்
என்னை நடத்துவார்
கிருபையால் என்னை அலங்கரித்து
நன்மையினால் என்னை முடி சூட்டுவார்
3. கலங்காதே விசுவாசியே
கர்த்தர் உனக்கு துணை
அழைத்தவரே அவர் உண்மையுள்ளவர்
அற்புதமாய் உன்னை நடத்துவார்

1525

ஏழு ஸ்வரங்களில் எத்தனை ராகங்கள்
என் இயேசு ராஜனுக்கு எத்தனை நாமங்கள்
ஆயிரமாயிரம் நாவுகளாம் அன்பின் தேவன்
அருள்நாதன் புகழ்பாடுவோம்
ஸ்வர்ண ராகங்கள் ஸ்வரம் பாடவே
வெள்ளி மணி ஓசைகள் ஜதி போடவே
ராகங்கள் தாளங்கள் கைதாளங்கள்
தந்தும்மை தினந்தோறும் நான் பாடுவேன்

1. பன்னிரெண்டு ஆண்டுகள்
பெரும் பாடுகள் பட்டவளாம்
பற்பல இடங்களில் வைத்தியம்
தேடி அலைந்தவளாம்-மாவேந்தர்

மகிமையின் ஆடையை தொட்டாள் -2
அந்தக்ஷணமே சுகமடைந்தாள்

2. குஷ்டரோகி அவனை தொட்டு
கரம்பிடித்தார்-இஷ்டமுடன் அவனை
இயேசு தம்மிடம் சேர்த்து கொண்டார்
பாவங்களை போக்கும் பரிசுத்த தேவன்
பரிவோடு தொட்டு குணமாக்கினார்

3. எத்தனை அற்புதங்கள் எனக்கும்
செய்தீரே-எண்ணிக்கை அடங்குமோ
எந்நாளும் மறக்க முடியுமோ
இசையோடு உம்மைப்பாட வைத்தவர் நீரே
என்றென்றும் என்னை காப்பவர் நீரே

1526

சுவையானதே அறுசுவையிலும்
அருமையானதே
தேனானதே தெளிதேனிலும் மதுரமானதே
தெவிட்டவில்லை சலிக்கவில்லை
வாழ்த்தி பாடிட வார்த்தையில்லை
உத்தன் நாவு ரசனையில்
உலகமே மறக்கிறேன்

அழகே! அமுதே! தேன் துளிரும் மலரே
விழிகள் முழுதும் உம்
அன்பின் நிழலலே –2

1. உம் அன்பை ரசித்து ருசித்துப் பார்த்தேன்
சிற்றின்ப சிறையிருப்பை வெறுத்தேன்-2
அலையலையாய் எழும்பும் வீணாசைகள்
மலைத்தே மறையும்
உம் திவ்விய திருமுகம்

என் ஆசை இரட்சகா அழகின் சிகரமே
தங்க நாயகா தந்தேன் எனையே
என ஆசை எண்ணங்கள் செத்து மாளவே
சிலுவை சிநேகத்தின் கைதியாகினேன்–2

2. வேதத்தின் ஆழங்களை அறிய
என் கண்களால் உம் வெளிச்சம் தாரும்
வாழ்க்கையின் தீபமும் உம் வார்த்தையே
நிதமும் நடத்தும் உம் தூய வழிகள்
என் அன்பு இரட்சகா அழகின் சிகரமே

Pas. ஜெர்சன் எடின்பரோ

1527 R-Biola T-118 Gm 6/8

என் வாழ்வில் எல்லாமே இயேசு தான்
எந்நாளும் இந்நாளும் இயேசு தான்
என் முன்னும் என் பின்னும் இயேசு தான்
என் மூச்சும் பேச்சும் இயேசு தான்

1. விண்ணிலிருந்து மண்ணில்
வந்தவர் இயேசு தான்
என்னை மீட்க தன்னை சேயாய் (2)
காலமெல்லாம் காத்து
நிற்பவர் இயேசுதான் (2)

2. ஆற்றல் அனைத்தும் எனக்கு
தந்தவர் இயேசு தான்
ஆவியில் ஆட வைத்து பார்த்து
நிற்பவர் இயேசு தான்
அவர் நாமம் நான் பாட
அன்பு காட்டி ஆற்றல் தந்தவர் இயேசு தான்

3. பாவத்திலிருந்து மன்னிப்பு
தந்தவர் இயேசு தான்
பாதை காட்டி வெளிச்சம்
தந்தவர் இயேசு தான்
அன்பின் நேசம் சொந்த பாசம்
என் கால்களுக்கு தீபமானவர் இயேசு தான்

1528 R-16 Beat T-85 Cm 4/4

சொந்த இரத்தம் சிந்தி என்னை
சொந்தமாக்கி கொண்டீரே நீர்
நன்றி நன்றி நன்றி ஐயா
நன்றி நன்றி என் இயேசையா

1. மண்ணான மனிதன் எனக்காக
மரத்திலே தூக்கப்பட்டு சாபமானீரே
நியாயப்பிரமாண சாபத்திற்கென்னை
நீங்கலாக்கி மீட்டுக் கொண்டீரே

2. பாவ மனிதன் எனக்காக
பாடுகளெல்லாம் ஏற்றுக் கொண்டீரே
இரத்தத்தினாலே பிதாவை சேரும்
சிலாக்கியம் எனக்கு பெற்றுத் தந்தீரே

3. என் மீது கொண்ட அன்பினாலே
அவமானம் எல்லாம் ஏற்றுக்கொண்டீரே
விலையேறப்பெற்ற கிருபையாம்
இரட்சிப்பை இலவசமாய் பெற்று தந்தீரே

Bro. C. ராஜா (கடையநல்லூர்)

1529

அல்பா ஓமேகா ஆதி அந்தமே
ஆண்டவர் இயேசு உயர்ந்தவரே
அகிலம் படைத்தவர் நீரே
அடியார் உம்மை தொழுகின்றோம்

1. யெகோவா நிசி வெற்றிகொடி
யெகோவா ரஃபா பரிகாரி
சுற்றிலும் சூழ்ந்து இருப்பவரே
துதிகள் செலுத்தி தொழுகின்றோம்

2. யெகோவா யீரே போதும் நீரே
யெகோவா ஷாலோம் சமாதானம்
பரிசுத்த தொழுகை அலங்காரம்
பயத்துடன் உம்மை பணிகின்றோம்

3. உயிர்த்தெழுந்த தேவன் நீரே
மரணத்தை வென்று எழுந்தவரே
மூப்பர்கள் ஜீவன்கள் பணிகின்றார்
மகிமையும் கனமும் செலுத்துகின்றோம்

1530

இதுவரை செய்த செயல்களுக்காக
இயேசுவே உம்மை பாட வந்தேன்
இம்மட்டும் காத்தவரே இம்மானுவேலே
எழு ஸ்வரங்களில் பாடுகின்றேன்
இசையால் மகிமை படுத்துகின்றேன்

1. என்னில் நன்மை இல்லாதிருந்தும்
ஏனோ என்னை தெரிந்து கொண்டீர்
ஏழை என் நாவினில் பாடிடும் ஒரு தொனி
இயேசுவே நான் பாடும் கல்யாணி
நித்தம் நித்தம் உந்தன் பாடல் பாடிட
நேசரே உந்தன் அன்பை கோரிட
கெட்ட ஆவி நெடுந்தூரம் ஓடிட
பாட்டு பாடுவேன் தாவீதைப் போல்
அந்த பாடலில் இருந்த வல்லமை
இந்த வேளையில் இறங்க செய்யவே
வருவீர் வரம் தருவீர்
கிருபை தினம் பொழிவீர்
எந்தன் நாவில் உந்தன் வேதம் என்றும்
ஒலிக்க கிருபை செய்வீர்
துதிகளிலே வாசம் செய்யும்
தூயவரே உம்மை பாட வந்தேன்

1531

கர்த்தர் எனக்காய் யாவையும்
செய்து முடிப்பார் –4

சொன்னதை செய்யும்வரை அவர்
என்னைக் கைவிடுவதில்லை –2

1. கர்த்தர் எனக்காய் கர்த்தர் எனக்காய்
யாவையும் செய்து முடிப்பார்
கர்த்தர் எனக்காய் கர்த்தர் எனக்காய்
மலைகளை பெயர்ப்பாரே

2. நீர் சொன்னது நடக்குமோ
என்ற சந்தேகம் இல்லை
நீர் நினைத்தது நிலைநிற்குமோ
என்ற பயமும் இல்லை

3. என் நிந்தனை நிரந்தரம்
இல்லை என்றீரே
நான் இழந்ததைத் திரும்பவும்
தருவேன் என்றீரே

1532

எஜமானனே எஜமானனே – உம்
சேவைக்காய் என்னை அழைத்தீர்

அழியும் என் கைகளைக் கொண்டு
அழியா உம் ராஜ்ஜியம் கட்ட
பைத்தியமான என்னை தெரிந்தெடுத்தீர்
அழியும் என் உதடுகள் கொண்டு
அழியா உம் வார்த்தையை சொல்ல
எத்தனாய் வாழ்ந்த என்னை தெரிந்தெடுத்தீர்

ஆராதிப்பேன் அதை எண்ணியே
வாழ்நாளெல்லாம் உமை மட்டுமே
ஆராதிப்பேன் ஆராதிப்பேன் (4)

1. என்னில் என்ன நன்மை கண்டீர்
என்னை அழைத்து உயர்த்தி வைத்தீர்

2. உம் சித்தத்தை நான் செய்வதே
அனுதினமும் என் போஜனம்

1533

நசரேயனே என் இயேசையா
என்றும் உம் நாமம் பாடி
தேவாதி தேவன் நீரே என்று
குரல் உயர்த்தி உம் புகழை நான் பாடுவேன்

1. வானாதி வானங்களை
உம் கரத்தினால் அளந்தீரல்லோ
வெறுமையிலே பூலோகத்தை
நிலை நிறுத்தச் செய்தீரே என் இயேசையா
உமக்கே ஸ்தோத்திரம் (4)

2. ஆகாய சமுத்திரத்தின்
எல்லையை நீரே குறித்தீரல்லோ
தண்ணீருக்குள் நான் கடந்திட்டாலும்
புரளாமல் காத்தீரே என் இயேசையா

3. சீயோனின் சிகரமது
உம் சிங்காசனம் ஆனதே
சீயோனிலே உம்மைக் கண்டிடவே
ஆசையாய் துடிக்கிறேன் என் இயேசையா

Pas. ஏசன்னா (ஆந்திரா)

1534

இயேசு என்னில் வந்தார்
என் வாழ்வில் சந்தோஷமே
என் பாவம் முற்றும் சுமந்தார்
என் வாழ்வில் சந்தோஷமே
நோய்களை எல்லாம் நீக்கினார்
என் வாழ்வில் சந்தோஷமே
தம் பிள்ளையாக தெரிந்தார்

என் வாழ்வில் சந்தோஷமே
நான் பாடி ஸ்தோத்தரிப்பேன்,
ஆராதித்து சந்தோஷிப்பேன், –2
பாடி போற்றி ஆடி பாடி,
ஹாலேலூயா, ஹாலேலூயா (5)

1. என் மனதை கவர்ந்த நேசரே
நான் பாடி கொண்டாடுவேன்
உலகில் பெரிய தேவனே
நான் பாடி கொண்டாடுவேன்
உயிருள்ள நாட்கள் எல்லாம்
நான் பாடி கொண்டாடுவேன்

2. துதிக்கு பாத்திரர் இயேசுவை
நான் பாடி கொண்டாடுவேன்
என் பெலனாகிய இயேசுவே
நான் பாடி கொண்டாடுவேன்
என்னில் கிருபை கொண்ட இயேசுவே
நான் பாடி கொண்டாடுவேன்

1

ராகம் – ஆனந்த பைரவி D

ஆத்துமமே என் முழு உள்ளமே
உன் ஆண்டவரைத் தொழு தேத்து
இந்நாள் வரை அன்பு வைத்தாதரித்த
உன் ஆண்டவரைத் தொழு தேத்து

1. போற்றிடும் வானோர் பூதலத்துள்ளோர்
சாற்றுதற் கரிய தன்மையுள்ள
2. தலைமுறை தலைமுறை தாங்கும் விநோத
உலகை முன்தோன்றி ஒழியாத
3. தினம் தினம் உலகில் நீ செய் பலவான
வினை பொறுத் தருளும் மேலான
4. வாதை நோய் துன்பம் மாற்றி அனந்த
ஒதரும் தயை செய் துயிர் தந்த
5. உற்றுனக் கிரங்கி உரிமை பாராட்டும்
முற்றும் கிருபையினால் முடி சூட்டும்
6. துதி மிகுந்தேற ஸ்தோத்திரி தினமே
இதயமே உள்ளமே என் மனமே

தைரியம் ரைட்டர்

2

ராகம் – பூரி கல்யாணி C

ஆதி பிதாக் குமாரன் ஆவி திரியேகர்க்கு
அனவரதமும் ஸ்தோத்திரம்
திரியேகர்க்கு அனவரதமும் ஸ்தோத்திரம்
நீத முதற் பொருளாய் நின்றருள்
சருவேசன் நிதமும் பணிந்தவர்கள்
இருதய மலர் வாசன்

நிறைந்த சத்திய ஞான மனோகர
உறைந்த நித்திய வேத குணாகர–2
நீடு வாரி திரை சூழ மேதினியை
மூடு பாவ இருள் ஓடவே அருள்செய்

1. எங்கணும் நிறைந்த நாதர் பரிசுத்தர்கள்
என்றென்றைக்கும் பணிபாதர்
துங்க மா மறைப்பிர போதர்
கடைசி நடு சோதனை செய் அதி நீதர்
பாங்கில்லான் தாபம் இல்லான்
பகர் அடி முடிவில்லான்- பண் ஞானம்
சம்பூரணம் பரிசுத்தம் நீதி என்னும்

பண்பதாய் சுயம்ப விவேகன்
அன்பிரக்க தயாளப்பிரவாகன்–2
பார்தலத்தில் சிருஷ்டிப்பு மீட்பு பரி
பாலனத்தையும் பண்பாய் நடத்தி அருள்

2. நீதியின் செங்கோல் கைக்கொண்டு
நடத்தினால் நாம் நிணிலத்தில்லாமல் அழிந்து
தீதுறு நரகில் தள்ளுண்டு மடிவோ மென்று
தேவ திருவுளம் உணர்ந்து பாதகர்க்குயிர்
தந்த பாலன் இயேசுவைக் கொண்டு
பரன் எங்கள் மிசை தயை
வைத்தனர் இது நன்று

பகர்ந்த தன்வடி யார்க்குறு சஞ்சலம்
இடைஞ்சல் வந்த போதே தயவாகையில்
பாரில் நேரிடும் அஞ்ஞான சேதமுதல்
சூரியன் முன் இருள் போலவே சிதறும்

காபிரியேல் உபதேசியார்

3

ராகம் – நவரோஜ் E

அதிகாலையிலுமைத் தேடுவேன்
முழு மனதாலே – தேவாசீர்வாதம்
பெற நாடுவேன் ஜெபதபத்தாலே

இதுகாறும் காத்த தந்தை நீரே–இனி
மேலும் காத்தருள் செய்வீரே–பதிவாக
உம்மிலே நான் நிலைக்கவே–பத்திரமாய்
எனை உத்தமனாக்கிடும் தேவே

1. போன ராமுழுவதும் பாதுகாத்தருளின போதா
எப்போதும் எங்களுடனிருப்பதாய்
உரைத்த நல் நாதா - ஈனப்பாவிக்
கேது துணை லோகிலுண்டு பொற்பாதா
எனக்கான ஈசனே வான ராசனே - இந்த
நாளிலும் ஒரு பந்தமில்லாமல் காரும் நீதா
2. பல சோதனைகளால் சூழ்ந்து நான்
கலங்கிடும் போது-தப்பாது நின் கிருபை
தாங்கிட வேணும் அப்போது - விலகாது
என் சமுகம் என்ற வாக்கில் தவறேது
விசுவாசம் கொண்டு மெய் பாசமூண்டிட
விக்கினம் யாவிலும் வெற்றி
காணுவேன் மலைவேது
3. நரர் யாவர்க்குமுற்ற நண்பனாய்
நடந்திட வையே - தீ நாவின் பாவமற
நன்மைகள் மொழிந்திடச் செய்யே
பரலோக ஆவியை நல்
மாரி போலெனிலே பெய்யே
புகழார நாதனே! வேத போதனே
பூரணமாய் உனைப் போற்றுவேன்
தினம் தினம் மெய்யே

சா. பரமானந்தம் ஐயர்

4

ராகம் – கமாஸ் C

அன்பே பிரதானம் – சகோதர
அன்பே பிரதானம்

1. பண்புறு ஞானம் பரம நம்பிக்கை
இன்ப விசுவாசம் இவைகளெல்லாம்
2. பலபல பாஷை படித்தறிந்தாலும்
கலகல வென்னும் கைம்மணியாமே
3. என் பொருள் யாவும் ஈந்தளித்தாலும்
அன்பிலையானால் அதிற் பயனில்லை
4. துணிவுடனுடலைச் சுடக்கொடுத்தாலும்
பணிய அன்பில்லால் பயனதில்லை
5. சாந்தமும் தயவும் சகல நற்குணமும்
போந்த சத்தியமும் பொறுமையுமுள்ள
6. புகழிறு மாப்பு பொழிவு பொறாமை
பகைய நியாயப் பாவமுஞ் செய்யா

ஜெப மொழி இயேசுவின் வாழ்க்கை புத்தகத்தின் ஒவ்வொரு பக்கமும் ஜெபமே.

7. சினமடையாது தீங்கு முன்னாது
தினமழியாது தீமை செய்யாது
8. சகலமும் தாங்கும் சகலமும் நம்பும்-மிகை
படவென்றும் மேன்மை பெற்றோங்கும்
S. F. ஞானமணி ஐயர்

5
ராகம் – சங்கராபரணம் C

ஆதி திரு வார்த்தை திவ்விய
அற்புத பாலனாகப் பிறந்தார் (2)
ஆதம் தன் பாவத்தின் சாபத்தை தீர்த்திட
ஆதிரை யோரை யீடேற்றிட–2

மாசற்ற ஜோதி திருத்துவதோர் வஸ்து
மரியாம் கன்னியிட முதித்து (2)
மகிமையை மறந்து தமை வெறுத்து
மனுக் குமாரன் வேஷமாய்-2
உன்ன தகஞ்சீர் முகஞ்சீர் வாசகர்
மின்னுஞ்சீர் வாசகர் மேனிறம் எழும்
உன்னத காதலும் பொருந்தவே - சர்வ
நன்மை சொருபனார் ரஞ்சிதனார்

தாம் தாம் தன்னரை வன்னரை
தீம் தீம் தீமையகற்றிட
சங்கீர்த சங்கீர்த சங்கீர்த சந்தோ
ஷமென சோபனம் பாடவே–2
இங்கீர்த இங்கீர்த இங்கீர்த நமது
இருதயத்திலும் எங்கும் நிறைந்திட

1. ஆதாம் ஒதி ஏவினர்
ஆபிரகாம் விசுவாசவித்து (2)
யூதர் சிம்மாசனத் தாளுகை செய்வோர்
ஈசாய் வங்கிஷத்தாலுதித்தார்
2. பூலோக பாவ விமோசனர்
பூரணக் கிருபையின் வாசனர் (2)
மேலோக ராஜாதி ராஜன் சிம்மாசனன்
மேன்மை மகிமை பிரதாபன் வந்தார்
3. அல்லே லூயா சங்கீர்த்தனம்
ஆனந்த கீதங்கள் பாடவே (2)
அல்லைகள் தொல்லைகளெல்லாம்
நீங்கிட- அற்பரன் மெய்ப்பரன் தற்பரனார்
வேதநாயகம் சாஸ்திரியார்

6
ராகம் – காபி (இந்துஸ்தான்) F

ஆவியை அருளுமே சுவாமி – எனக்காய்
உயிர் கொடுத்த வானத்திரசே!

1. நற்கனி தேடிவரும் காலங்களல்லவோ
நானொரு கனியற்ற பாழ்மர மல்லவோ
முற்கனி முகங்காணா வெம்பயிரல்லவோ
முழுநெஞ்சம் விளைவற்ற உவர் நிலமல்லவோ
2. பாவிக்கு ஆவியின் கனியெனும் சிநேகம்
பரம சந்தோஷம், நீடிய சாந்தம்
தேவ சமாதானம், நற்குணம், தயவு,
திட விசுவாசம் சிறிதெனுமில்லை

3. தீபத்துக் கென்னையை சீக்கிரமூற்றும்
திரி யவியாமலே தீண்டியே யேற்றும்
பாவ அசுசங்கள் விலக்கியே மாற்றும்
பரிசுத்த வரந்தந்தென் குறைகளைத் தீரும்
அருளானந்தம் ஐயர்

7
ராகம் – ஆனந்த பைரவி Cm

இம்மட்டும் ஜீவன் தந்த
கர்த்தாவை அத்தியந்த என்மையாய்
ஸ்தோத்திரிப்போமாக

நம்மை இரட்சிக்க வந்து
தம்மை பலியாய் தந்து
நற்சுகம் மேவவும் அற்புதமாகவும் (2)

1. காலம் சொல் போல் கழியும்
தண்ணீரைப் போல் வடியும்-கனாவைப்
போலேயும் ஒழியும் - வாலிபமும்
மறையும் சீலம் எல்லாம் குறையும்
மண்ணின் வாழ்வொன்றும் நிற்கமாட்டாது
கோலப் பதுமைக்கும் நீரக்
குமிழிக்கும் புகைக்குமே - கொண்ட
உலகத்தில் அண்ட பரன் எமை
கண்டு கருணைகள் விண்டு தயவுடன்
2. பலவித இக்கட்டையும்
திகில்களையும் கடந்தோம்
பரம பாதையை தொடர்ந்தோம்
வலிய தீமையை வென்றோம்
நலியும் ஆசையைக் கொன்றோம்
வஞ்சர் பகைக்கும் தப்பி நின்றோம்
கலி என்ற தெல்லாம் விண்டோம்
கர்த்தாவின் மீட்பைக் கண்டோம்
காய்ந்த மனதொடு பாய்ந்து விழு கணம்
சாய்ந்து கெடவும் ஆராய்ந்து நெறியுடன்
3. சன சேதம் வருவிக்கும் கேடுகட்கோர்
முடிவு-தந்து நொறுங்கினதைக் கட்டி
சன சபையை ஆதரித் தன்பாய் ஆசீர்வதித்து
கண்ணோக்கி எல்லார்மேல் அன்றன்று
தினமும் அருள் உதிக்க செய்து தமது தேவ
சிந்தை யினோடதி விந்தையதாய் உயிர்
மைந்தனால் எங்களை இந்த விநோதமாய்
வேதநாயகம் சாஸ்திரியார்

8
ராகம் – ஹரிகாம்போதி F

இயேசுவின் நாமமே திருநாமம்
முழு இருதயத்தால் தொழுவோம் நாமும்

1. காசினியி தெனுக் கிணையில்லையே
விசுவாசித்தவர்களுக்கு குறைவில்லையே
2. இத்தரையில் மெத்தவதிசய நாமம்
அதை நித்தமுந் தொழுபவர்க்கு ஜெய நாமம்
3. உத்தம மகிமைப் பிரசித்த நாமம்
இது சத்திய விதேய மன மொத்த நாமம்
4. விண்ணவரும் பண்ணுடன் கொண்டாடும்

நாமம் - நம்மை அண்டிடும் பேய்
பயந்தோடும் வல்ல நாமம்

5. பட்சமுடன் ரட்சை செய்யு முபகாரி
பெரும் பாவப் பிணிகள் நீக்கும் பரிகாரி

S.P. ஞானமணி ஐயர்

9

ராகம் - தோடி D

இயேசு ராசா எனை ஆளும் நேசா – 2

1. மாசிலா மணி ஆன முச்சுடர் மேசியா அரசே
மனுவேலே மாமறை நூலே
தேவ செங்கோலே
இங்கெனின் மேலே அன்பு செய்

2. தாவீ தரசன் மைந்தா
நின் சரணம் சரணம் எந்தா!
சதானந்தா வா னந்தா உவந்தாள்
மிக வந்தனம் வந்தனம்!

3. ஐயா என் மனம் ஆற்றி
உன தடிமை எந்தனை தேற்றி
குணமாக்கி வினை நீக்கி
கைதூக்கி மெய்ப் பாக்கியம் கொடு

4. சுத்த திரித்துவ வஸ்துவே
சுவி சேட மகத்துவ கிறிஸ்துவே
பரிசுத்தனே கரி சித்தெனை - இரட்சித்
தடிமைகொள் நித்தியம் தோத்திரம்!

5. மங்களம் ஈசாவே வளம் மிகும்
சாங்கையின் ராசாவே - நரர்
வாழ்வே மன்னாவே மெய்த்தேவே
உமக் கோசன்னாவே!

வேதநாயகம் சாஸ்திரியார்

10

ராகம் - தெகுலகாம்போதி D

இயேசுவையே துதி செய் நீ மனமே
இயேசுவையே துதி செய்
கிறிஸ்தேசுவையே துதி செய்
நீ மனமே இயேசுவையே துதி செய்

1. மாசணுகாத பராபர வஸ்து
நேச குமாரன் மெய்யான கிறிஸ்து

2. அந்தரவான் தரையுந் தரு தந்தன்
சுந்தர மிகுந்த சவுந்தர நந்தன்

3. எண்ணின காரியம் யாவு முகிக்க
மண்ணிலும் விண்ணிலும் வாழ்ந்து சுகிக்க

வேதநாயகம் சாஸ்திரியார்

11

ராகம் - முகாரி Cm

உன்னையன்றி வேறே கதி
ஒருவரில்லையே சுவாமி

அன்னை தந்தை உற்றார் சுற்றார்
ஆருமுதவுவரோ – அதிசய மனுவேலா
ஆசை என் இயேசு ஸ்வாமி

1. பண்ணின துரோகமெல்லாம்
எண்ணினா லெத்தனைகோடி
பாதகத்துக் குண்டோ எல்லை
பரிதபித்தேனே தேடி
கண்ணினாலுன் திருவடி
காண நான் தகுமோ தான்
கடையனுக்கருள்புரி
மடியுமுன் யேசு சுவாமி

2. அஞ்சியஞ்சி தூர நின்றென்
சஞ்சலங்களை நான் சொல்லி
அலைகடல் துரும்புபோல்
மலைவு கொண்டேனானையோ
கெஞ்சி கெஞ்சிக் கூவுமிந்த
வஞ்சகன் முகம்பாராய்
கிட்டி என்னிடம் சேர்ந்து
கிருபை வை இயேசு சுவாமி

3. எத்தனை கற்றாலும் தேவ
பக்தியேதுமற்ற பாவி
எவ்வளவு புத்தி கேட்டும்
அவ்வளவுக் கதி தோஷி
பித்தனைப் போல பிதற்றி
கத்தியே புலம்புமேழை
பேதையை கடைத்தேற்றி
பிழைக்க வை இயேசு சுவாமி

4. கள்ளனாம் கபடனென்னை
தள்ளிவிட்டா லாவதென்ன
கல்லைப்போல் கடினங் கொண்ட
கர்ம சண்டாளன் பாழும்
உள்ளமுங்கரைந்தே உன்றன்
உயர் சிலுவையின் அன்பால்
உலையிலிட்ட மெழுகாய்
உருகவை இயேசு சுவாமி

வே. ஐ. பெஞ்சமின்

12

ராகம் - சுரஹரப்ரியை E

எங்கும் புகழ் இயேசு ராசனுக்கே
எழில் மாட்சிமை வாலிபரே

உங்களையல்லவோ
உண்மை வேதம் காக்கும்
உயர் வீரரெனப் பக்தர் ஓதுகிறார்

1. ஆயிரத் தொருவர் ஆவீரல்லோ நீரும்
அதை அறிந்து துதி செய்குவீர்
தாயினும் மடங்கு சதம் அன்புடைய
சாமி இயேசுவுக்கிதயம் தந்திடுவீர்

2. கல்வி கற்றவர்கள் கல்வி கல்லாதோர்க்கு
கடன் பட்டவர் கண்திறக்கவே-பல்வழி
அலையும் பாதை தப்பினோரை
பரிந்து திருப்ப நிதம் பார்த்திடுவீர்

3. தாழ்மை சற்குணமும் தயை காருண்யமும்
தழைப்பதல்லோ தகுந்த கல்வி-பாழுந்
துர்க்குணமும் பாவச் செய்கை யாவும்
பறந்தோடப் பார்ப்பதுங்கள் பாரமன்றோ?

4. சுத்த சுவிசேஷம் துரிதமாய் செல்ல
தூதர் நீங்களே தூயன் வீரரே-கர்த்தரின்

பாதத்தில் காலை மாலை தங்கி
கருணை நிறை வசனம் கற்றிடுவீர்

வே. பொன்னுசாமி ஐயர்

13 ராகம் – தன்யாசி Cm

எத்தனை திரள் என் பாவம் என் தேவனே!
எளியன் மேல் இரங்கையனே
நித்தம் என் இருதயம் தீயதென் பரனே
நிலைவரம் எனில் இல்லை நீ என் தாபரமே

1. பந்தம் உன்மேல் எனக்கில்லை
என்பேனோ பணிந்திடல் ஒழிவேனோ
சுத்தமுறுங் கரம்கால்கள் விலாவினில்
தோன்றுது காயங்கள் தூய சிநேகா!

2. எந்தன் அநீதிகள் என் கண்கள் முன்னமே
இடை விடாதிருக்கையிலே
உந்தன் மிகும் கிருபை ஓ! மிகவும் பெரிதே
உத்தம மனமுடையோய் எனை ஆளும்!

3. ஆயங்கொள்வோன் போல் பாவ ஸ்திரீ போல்
அருகிலிருந்த கள்ளன்போல் - நேயமாய்
உன் சரண் சரண் என வணங்கினேன்
நீ எனக்காகவே மரித்தனை பரனே!

4. கெட்ட மகன்போல் துஷ்டனாய் அலைந்தேன்
கெடு பஞ்சத்தால் நலிந்தேன்-இட்டமாய்
மகன் என பாத்திரன் அலன் நான்-எனை
இரட்சித்திடல் உந்தன் நிமித்தமே அப்பனே

த. பலவேந்திரம்

14 ராகம் – பியாகு C

என்நாளுமே துதிப்பாய்–என்
ஆத்துமாவே நீ என்நாளுமே துதிப்பாய்
இந்நாள் வரையிலே உன்னதனார் செய்த
எண்ணில்லா நன்மைகள் யாவும் மறவாது

1. பாவங்கள் எத்தனையோ? நினையா
திருந்தாருன் பாவங்கள் எத்தனையோ?
பாழான நோயை அகற்றிக் குணமாக்கி
பாரினில் வைத்த மகா தயவை எண்ணி

2. எத்தனையோ கிருபை உன்னுயிர்க்கு
செய்தாரே எத்தனையோ கிருபை
நித்தமுனைமுடி சூட்டினதுமன்றி
நித்தியமான ஜீவனை ஈந்ததால்
(நேயமதாக ஜீவனை மீட்டதால்)

3. நன்மையாலுன் வாயை நிறைத்தாரே
பூர்த்தியாய் நன்மையாலுன் வாயை-உன்
வயது கழுகைப் போல் பலங்கொண்டு
ஓங்கும் இளமைபோ லாகவே செய்ததால்

4. பூமிக்கும் வானத்துக்கும் உள்ள தூரம்
போலவே பூமிக்கும் வானத்துக்கும்
சாமி பயமுள்ளவர் மேல் அவர் அருள்
சாலவும் தங்குமே சத்திய மேயிது

5. மன்னிப்பு மாட்சிமையாம்-மாதேவ
னருளும் மன்னிப்பு மாட்சிமையாம்
எண்ணுவாயோ கிழக்கு மேற்கின் தூரமே
மண்ணில் உன்பாவம் அகன்றத தூரமே

6. தந்தை தன் பிள்ளைகட்கு-தயவோ
டிரங்குவானோ தந்தை தன் பிள்ளைகட்கு
எந்த வேளையும் அவரோடு தங்கினால்
சொந்தம் பாராட்டியே தூக்கி சுமப்பாரே

S. பரமானந்தம் ஐயர்

15 ராகம் – சங்கராபரணம் D

எல்லாம் யேசுவே எனக்கெல்லாம்
இயேசுவே-தொல்லைமிகு
இவ்வுலகில் துணை இயேசுவே

1. ஆயனும் சகாயனும்
நேயனும் உபாயனும்-நாயனும்
எனக்கன்பான ஞான மண வாளனும்

2. தந்தை தாய் இனம் ஜனம்
பந்துளோர் சிநேகிதர்-சந்தோட
சகல யோக சம்பூரண பாக்யமும்

3. கவலையில் ஆறுதலும்
காங்குலிலென் ஜோதியும்-கஷ்டநோய்
படுக்கையிலே கைகண்ட அவிழ்தமும்

4. போதகப் பிதாவுமென்
போக்கினில் வரத்தினில்-ஆதரவு
செய்திடும் கூட்டாளியுமென் தோழனும்

5. அணியும் ஆபரணமும் ஆஸ்தியும்
சம்பாத்யமும் - பிணையாளியும்
மீட்பருமென் பிரிய மத்தியஸ்தனும்

6. ஆன ஜீவ அப்பமும் ஆவலுமென்
காவலும் - ஞான கீதமும் சதுரும்
நாட்டமும் கொண்டாட்டமும்

யே. ஞானமணி

16 ராகம் – இந்துஸ்தானி (பியாகு) C

என் மீட்பர் உயிரோடிருக்கையிலே –எனக்
கென்ன குறையுண்டு நீ சொல் மனமே

1. என்னுயிர் மீட்கவே தன்னுயிர் கொடுத்தார்
என்னோடிருக்கவே எழுந்திருந்தோர்
விண்ணுலகுயர்ந்தோர் உன்னதஞ் சிறந்தோர்
மித்திரனே சுக பத்திரமருளும்

2. பாவமோ மரணமோ நரகமோ பேயோ
பயந்து நடுங்கிட ஜெயம் சிறந்தோர்
சாபமே தீர்த்தோர் சற்குரு நாதன்
சஞ்சலமினியேன்? நெஞ்சமே மகிழாய்

3. ஆசி செய்திடுவார் அருள்மிக அளிப்பார்
அம்பரந் தனிலெனக்காய் ஜெபிப்பார்
மோசமே மறைப்பார் முன்னமே நடப்பார்
மோட்ச வழி சத்யம் வாசல் உயிரெனும்

4. கவலைகள் தீர்ப்பார் கண்ணீர் துடைப்பார்
கடைசி மட்டும் கைவிடாதிருப்பார்

பவ மன்னிப்பளிப்பார் பாக்கியம் கொடுப்பார்
பரம பதவியினுள் என்றனை எடுப்பார்

5. போனது போகட்டும் புவிவசை பேசட்டும்
பொல்லான் அம்பு கசெய்திடட்டும்
ஆனது ஆகட்டும் அருள்மழை பெய்திடும்
அன்புமிகும் பேரின்ப மெனக்கருள்

ஞா.சாமுவேல் ஐயர் (குரங்கம்பாடி)

17

ராகம் – சங்கராபரணம் F

**என்ன என் ஆனந்தம் என்ன என்
ஆனந்தம் சொல்லக் கூடாதே
மன்னன் கிறிஸ்து என் பாவத்தை
யெல்லாம் மன்னித்து விட்டாரே**

1. கூடுவோம் ஆடுவோம் பாடுவோம்
ஒன்றாய் மகிழ் கொண்டாடுவோம்
நாடியே நம்மை தேடியே வந்த
நாதனைப் போற்றிடுவோம்

2. பாவங்கள் சாபங்கள் கோபங்களெல்லாம்
பரிகரித்தாரே-தேவாதி தேவன் என்
உள்ளத்தில் வந்து தங்கியே விட்டாரே

3. அட்சயன் பட்சமாய் இரட்சிப்பை
எங்களுக்(கு) அருளினதாலே
நிச்சயம் ஸ்வாமியைப் பற்றியே
சாட்சி பகர வேண்டியதே

4. வெண்ணங்கி பொன்முடி வாத்தியம்
மேல் வீட்டில் ஜெயக் கொடியுடனே
மண்ணுலகில் வந்து விண்ணுலகில்
சென்ற மன்னனை ஸ்தோத்திரிப்போம்

T. சத்தியநாதன் பிள்ளை (தஞ்சை)

18

ராகம் – சங்கராபரணம் D

**என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன்
ஏற்றுக்கொள்ளும் ஆயேசுவே (ஐயனே)**

**அன்னை தந்தை உந்தன்
சன்னதி முன்னின்று – சொன்ன
வாக்குத்தத்த மல்லாது இப்போது**

1. அந்தகாரத்தினின்றும் பவபேய்
அடிமைத் தனத்தி னின்றும்
சொந்த இரத்தக் கிரயத்தால் எனை மீட்ட-2
எந்தையே உந்தனுக்கிதோ! படைக்கிறேன்

2. ஆத்ம சரீரமதை உமக்கு - ஆதீன
மாக்கி வைத்தேன் பாத்ரமதாய்
அதை பாவித்துக் கொள்ள -2
காத்திருக்கின்றேன் கருணைசெய் தேவா

3. நீதியி னாயுதமாய் அவயவம்
நேர்ந்து விட்டேன் உமக்கு
ஜோதி பரிசுத்தர் ஆலயமாகவே-2
சொந்தமாய் தந்தேன் எந்தன் சரீரத்தை

சா. சீமோன்

19

ராகம் – தியாகு C

**கண்களை ஏறெடுப்பேன் மாமேரு
நேராய் என் கண்களை ஏறெடுப்பேன்
விண்மண் உண்டாக்கிய வித்தகனிடமிருந்து
எண்ணில்லா ஒத்தாசை எந்தனுக்கே வரும்**

1. காலைத்தள்ளாட வொட்டார் உறங்காது
காப்பவர் காலைத்தள்ளாட வொட்டார்
வேலையில் நின்றிஸ்ரவேலரைக் காத்தவர்
காலையும் மாலையும் கண்ணுறங்காரவர்

2. பக்தர் நிழல் அவரே எனை-ஆதரித்திடும்
பக்தர் நிழல் அவரே-எக்கால நிலைமையும்
எனை சேதப்படுத்தாது - அக்கோலம்
கொண்டோனை அக்காலம் புரியவே

3. எல்லா தீமைகட்கும் என்னை
விலக்கியே எல்லாத் தீமைகட்கும்
பொல்லா உலகினில் போக்கு வரத்தையும்
நல்லாத்து மாவையும் நாடோறும் காப்பவர்

ந. ஐயாத்துரை பாகவதர்

20

ராகம் – சங்கராபரணம் D

**கர்த்தரின் பந்தியில் வா–சகோதரா
கர்த்தரின் பந்தியில் வா...**

**கர்த்தர் அன்பாய் சொந்த ரத்தத்தை சிந்தின
காரணத்தை மனப் பூரணமாய் எண்ணி**

1. ஜீவ அப்பமல்லோ? கிறிஸ்துவின்
திரு சரீரமல்லோ? - பாவ மனங்கல்லோ?
உனக்காய் பகிரப்பட்டதல்லோ?
தேவ குமாரனின் ஜீவ அப்பத்தை நீ
தின்று அவருடன் என்றும் பிழைத்திட

2. தேவ அன்பைப் பாரு-கிறிஸ்துவின் சீஷர்
குறை தீரு - பாவக் கேட்டைக் கூறு
ராப்போஜன பந்திதனில் சேரு-சாவுக்குரிய
மா பாவமுள்ள லோகம் தன்னில்
மனம் வைத்து அன்னியன் ஆகாதே

3. அன்பின் விருந்தாமே கர்த்தருடன்
ஐக்கியப் பந்தி யாமே - துன்பம்
துயர் போமே இருதயம் சுத்த திடனாமே
இன்பம் மிகும் தேவ அன்பின் விருந்துக்கு
ஏது தாமதமும் இல்லாதிப்போதே வா

மரியான் உபதேசியார் (நெல்லை)

21

ராகம் – ஹரிகாம்போதி G

**சத்திய வேதத்தைத் தினம் தியானி
சகல பேர்க்கும் அதபிமானி
உத்தம ஜீவிய வழிகாட்டும்
உயர் வானுலகில் உனைக் கூட்டும்**

1. வாலிபர் தமக்கூண் அதுவாகும்
வயோதிபர்க்கும் அது உணவாகும்
பாலகர்க்கினிய பாலும் அதாம்
படிமீ தாத்ம பசி தணிக்கும்

2. சத்துரு பேயுடன் அமர் புரியும்
தருணம் அது நல் ஆயுதமாம்
புத்திரர் மித்திரரோடு மகிழும்
பொழுதும் அது நல் உறவாகும்

3. புலைமேவிய மானிடர் இதயம்
புனிதம் பெறுதற்கது மருந்தாம்
நிலையா நரர் வாழ்நாள் நிலைக்க
நேயகாய கற்பம் அதாம்

4. கதியின் வழி காணாதவர்கள்
கண்ணுக்கரிய கலிக்கம் அது
புதிய எருசலேம்பதிக்கு
போகும் பயணத்துணையும் அது

மு. சாமுவேல் (நாகர்கோவில்)

22 ராகம் - தேவ காந்தாரி G

தந்தேன் என்னை ஆயேசுவே
இந்த நேரமே உமக்கே
உந்தனுக்கே ஊழியம் செய்ய
தந்தேன் என்னைத் தாங்கியருளும்

1. ஜீவகாலம் முழுதும்
தேவபணி செய்திடுவேன்
பூவில் கடும் போர் புரிகையில்
காவும் உந்தன் கரத்தினில் வைத்து

2. உலகோர் என்னை நெருக்கி
பலமாய் யுத்தம் செய்திடினும்
நலமாய் சர்வ ஆயுதம் பூண்டு
நானிலத்தினில் நாதா வெல்லுவேன்

3. உந்தன் சித்தமே செய்வேன்
எந்தன் சித்தம் ஒழித்திடுவேன்
எந்த இடம் எனக்குக் காட்டினும்
இயேசுவே அங்கே இதோ போகிறேன்

4. கஷ்டம் நஷ்டம் வந்தாலும்
துஷ்டர் கூடி சூழ்ந்திட்டாலும்
அஷ்ட திக்கும் ஆளும் தேவனே
அடியேன் உம்மில் அமரச் செய்திடும்

5. ஒன்றுமில்லை நான் ஐயா
உம்மாலன்றி ஒன்றும் செய்யேன்
அன்று சீஷர்களித்த ஆவியால்
இன்றே அடியேனை நிரப்பும்

வே. சந்தியாகு ஐயர் (மதுரை)

23 ராகம் - சங்கராபரணம் F

தாசரே இத்தரணியை அன்பாய்
இயேசுவுக்கு சொந்தமாக்குவோம்
நேசமாய் இயேசுவைக் கூறுவோம்
அவரைக் காண்பிப்போம் – மாவிருள்
நீக்குவோம் வெளிச்சம் வீசுவோம்

1. வருத்தப்பட்டு பாரம் சுமந்தோரை வருந்தி
யன்பாய் அழைத்திடுவோம் - உரித்தாய்
இயேசு பாவப் பாரத்தை நமது துக்கத்தை
நமது துன்பத்தை சுமந்து தீர்த்தாரே

2. பசியுற்றோர்க்கு பிணியாளிகட்கு
பட்சமாக உதவி செய்வோம்
உசித நன்மைகள் நிறைந்து-தமை
மறந்து இயேசு கனிந்து திரிந்தனரே

3. நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை
நீசரை நாம் உயர்த்திடுவோம்
பொறுக்க வொண்ணா கஷ்டத்துக்குள்
நிவேரேத்துக்குள் பிடிப்புக்குள் விழுந்தவரே

4. மார்க்கம் தப்பி நடப்போரை சத்ய வழிக்குள்
வந்திடச் சேர்த்திடுவோம் - ஊக்கமாக
ஜெபித்திடுவோம் நாம் முயன்றிடுவோம்
நாம் உழைத்திடுவோம் நாம் ஜெயித்திடுவோம்

5. இந்து தேச மாது சிரோமணிகள்
விந்தை ஒளிக்குள் வரவழைப்போம்
சுந்தர குணங்களடைந்து அறிவிலுயர்ந்து
நிர்ப்பந்தங்கள் தீர்ந்து சிறந்திடவே

வே. சந்தியாகு ஐயர் (மதுரை)

24 ராகம் - பூரி கல்யாணி D

சீர்திரியேக வஸ்தே நமோ, நமோ
நின் திருவடிக்கு நமஸ்தே நமோ நமோ!
பார் படைத்தாளும் நாதா பரம சற்பிரசாதா
நாடுறும் தூய வேதா நமோ நமோ நமோ!

1. தந்தைப் பராபரனே நமோ, நமோ-எமை
தாங்கி ஆதரிப்போனே, நமோ நமோ!
சொந்தக் குமாரன் தந்தாய்,
சொல்லரும் நலமீந்தாய் - எந்தவிர்
போக்குமெந்தாய், நமோ, நமோ, நமோ!

2. எங்கள் பாவத்தினாசா நமோ, நமோ,
புது எருசலேம் நகர் ராசா நமோ, நமோ!
எங்கும் நின் அரசேற வரும் நின் புகழ் கூற
தூங்க மந்தையீற் சேர நமோ நமோ நமோ

3. பரிசுத்த ஆவி தேவா நமோ நமோ - தி
பலமளித் தெமைக் காவா நமோ, நமோ!
கரிசித்துதா நற்புத்தி கூடற்ற மனசுத்தி
திருமொழி பற்றும் பக்தி நமோ நமோ நமோ!

ஆ. சாமுவேல் ஐயர் (தரங்கம்பாடி)

25 ராகம் - சங்கராபரணம் F

சீர்மிகு வான்புவி தேவா ஸ்தோத்ரம்
சிருஷ்டிப்புயாவையும் படைத்தாய் ஸ்தோத்ரம்
ஏர்குணனே, ஸ்தோத்ரம், அடியார்க்
கிரங்கிடுவாய் ஸ்தோத்ரம், மா நேசா

1. நேர் மிகு அருள் திரு அன்பா ஸ்தோத்ரம்,
நித்தமும் உமக் கடியார்களின் ஸ்தோத்ரம்,
ஆர் மணனே, ஸ்தோத்ரம், உனது
அன்பினுக்கே ஸ்தோத்ரம், மா நேசா

2. ஜீவன் சுகம் பெலன் யாவுக்கும் ஸ்தோத்ரம்
தினம் தினம் அருள் நன்மைக்காகவும்
ஸ்தோத்ரம்-ஆவலுடன் ஸ்தோத்ரம் உனது
அன்பினுக்கே ஸ்தோத்ரம் மா நேசா

3. ஆத்தும நன்மைகட்காகவும் ஸ்தோத்ரம்
அதிசய நடத்துதற்காகவும் ஸ்தோத்ரம்,
சாற்றுகிறோம் ஸ்தோத்ரம் -உனது
தகுமன்புக்கே ஸ்தோத்ரம், மா நேசா

4. மாறா பூரண நேசா ஸ்தோத்ரம்-மகிழொடு
ஜெபமொழி மாலையின் ஸ்தோத்ரம்
தாராய் துணை ஸ்தோத்ரம், இந்தத்
தருணமே கொடு ஸ்தோத்ரம், மாநேசா

வே. மாசிலாமணி

26

ராகம் - உசேனி F

தந்தானைத் துதிப்போமே
திருச் சபையாரே கவி பாடிப்பாடி
தந்தானைத் துதிப்போமே

விந்தையாய் நமக் கனந்தனந்தமான
விள்ளற்கரியதோர் நன்மை மிக மிக

1. ஒய்யாரத்துச் சீயோனே
நீயும் மெய்யாக களிகூர்ந்து நேர்ந்து
ஒய்யாரத்துச் சீயோனே-ஐயனேசுக்கு
நின் கையைக் கூப்பித் துதி செய்குவையே
மகிழ் கொள்ளுவையே நாமும்

2. கண்ணாரக் களித்தாயே நன்மை
காட்சியைக் கண்டு ருசித்துப் புசித்து
கண்ணாரக் களித்தாயே
எண்ணுக்கடங்காத எத்தனையோ நன்மை
இன்னு முன்மேற் சோனா
மாரிபோற் பெய்துமே

3. சுத்தாங்கத்து நற்சபையே உனை
முற்றாய் கொள்ளவே அலைந்து திரிந்து
சுத்தாங்கத்து நற்சபையே-சத்துக்
குலைந்துனைச் சுத்தியாக்கத் தமின்
இரத்தத்தைச் சிந்தி எடுத்தே உயிர் வரம்

4. தூரந் திரிந்த சீயோனே - உனை
தூக்கியெடுத்துக் கரத்தினிலேந்தி
தூரந் திரிந்த சீயோனே
ஆரங்கள் பூட்டி அலங்கரித்து உனை
அத்தன் மணவாட்டி யாக்கினது என்னை!

வே. மாசிலாமணி ஐயர்

27

ராகம் - சங்கராபரணம் F

சருவ லோகாதிபா நமஸ்காரம் !
சருவ சிருஷ்டிகனே நமஸ்காரம் !
தரை கடல் உயிர் வான் சகலமும் படைத்த
தயாபர பிதாவே நமஸ்காரம்

1. திரு அவதாரா நமஸ்காரம்
ஜெகத் திரட்சகனே நமஸ்காரம்
தரணியின் மனுடர் உயிரடைந்தோங்க
தருவினில் மாண்டோய் நமஸ்காரம்

2. பரிசுத்த ஆவி நமஸ்காரம்!
பரம சற்குருவே நமஸ்காரம்!
அருபியாய் அடியார் அகத்தினில் வசிக்கும்
அரியசித்தே சதா நமஸ்காரம்

3. முத்தொழிலோனே நமஸ்காரம்
மூன்றிலொன்றோனே நமஸ்காரம்
கர்த்தாதி கர்த்தா கருணா சமுத்திரா
நித்ய திரியேகா நமஸ்காரம்

ம. வேதமாணிக்கம்

28

ராகம் - சுருட்டி G

சீர் ஏயேசு நாதனுக்கு ஜெயமங்களம்
ஆதி திரியேக நாதனுக்கு சுப மங்களம்
பாரேறு நீதனுக்கு பரம பொற் பாதனுக்கு
நேரேறு போதனுக்கு, நித்திய சங்கீதனுக்கு

1. ஆதி சரு வேசனுக்கு ஈசனுக்கு மங்களம்
அகிலப் பிரகாசனுக்கு நேசனுக்கு மங்களம்
நீதிபரன் பாலனுக்கு நித்திய குணாலனுக்கு
ஓதும் அனுகூலனுக்கு உயர் மனுவேலனுக்கு

2. மாணபி மானனுக்கு வானனுக்கு மங்களம்
வளர் கலைகியானனுக்கு ஞானனுக்கு
மங்களம் - கானான் நல் தேயனுக்கு
கன்னிமரி சேயனுக்கு - கோனார்
சகாயனுக்கு கூறு பெத்த லேயனுக்கு

3. பத்து லட்ச ணத்தனுக்கு சுத்தனுக்கு மங்களம்
பரம பதத்தனுக்கு, நித்தனுக்கு மங்களம்
சத்திய விஸ்தாரனுக்கு சருவாதிகாரனுக்கு
பக்தர் உபகாரனுக்கு, பரம குமாரனுக்கு

வேதநாயகம் சாஸ்திரியார்

29

ராகம் - மோகனம் E

சாலேமின் ராஜா சங்கையின் ராஜா
சுவாமி வாருமேன்
அந்த தாரணி மீதினில்
ஆளுகை செய்திட சடுதி வாருமேன்

1. சீக்கிரம் வருவேன் என்றுரைத்து
போன செல்வக் குமாரனே
இந்த சீயோனின் மாதுகள்
தேடித் திரிகின்ற செய்தி கேளீரோ

2. எட்டி எட்டி உம்மை அண்ணாந்து
பார்த்து கண் பூத்துப் போகுதே - நீர்
சுட்டிக் காட்டிப்போன வாக்குத்தத்தம்
நிறை வேறலாகுதே

3. நங்கை எருசலேம் பட்டினம்
உம்மை நாடித் தேடுதே
இந்த நானிலத்திலுள்ள
ஜீவப் பிராணிகள் தேடி வாடுதே

4. சாட்சியாக சுபவிசேஷம்
தாரணி மேவுதே உந்தன் சாட்சிகளுடைய
இரத்தங்களெல்லாம் தாவிக் கூவுதே

அருளானந்தம் ஐயர் (நெல்லை)

30

ராகம் - சூரியகாந்தம் E

துதி தங்கிய பரமண்டல
சுவிசேடக நாமம்- சுப மங்கள
மிகு சம்பிரம சுபசோபன க்ஷேமம்

1. அதி சுந்தர நிறை கொண்டுயர்
அருள் மோக்ஷ தீபன்
கதி உம்பர்கள் தொழும் இங்கித
கருணை பிரதாபன்

2. மந்தை ஆயர் பணிந்து பாதம்
மகிழ்ந்து வாழ்த்திய அத்தனார்

நிந்தையாய் ஒரு கந்தை மூடவும்
வந்த மா பரிசுத்தனார்

3. திருவான் உல கரசாய் வளர்
தேவ சொருபனார் - ஒரு மாதுடை
வினை மாறிட நரர் ரூபமதானார்

4. ஆபிராம் முனியிட மேவிய
பதிலாள் உபகாரன் - எபிரேயர்கள்
குலம் தாவீதென் அரசற்கோர் குமாரன்

5. சாதாரண வேதா கம
சாஸ்த்ர சுவிசேஷன் - கோதே
புரி ஆதா முடை கோத்ர திரு வேஷன்

6. விண்ணாடரும் மண்ணாடரும்
மேவுந் திருப் பாதன்-பண்ணோதுவர்
கண்ணாம் வளர் பரமண்டல நாதன்

வேதநாயகம் சாஸ்திரியார்

31

ராகம் – ஹரிகாம்போதி G

தேவ பிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ
சிறுமை தாழ்ச்சி அடைகிலேனே
ஆவலதாய் என்னைப் பைம்புன்மேல்
அவர் மேய்த்தமர் நீர் அருளுகின்றார்

1. ஆத்துமந்தன்னை குளிரப்பண்ணி
அடியேன் கால்களை நீதி யென்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார்

2. சா நிழல் பள்ளத் திறங்கிடினும்
சற்றும் தீங்கு கண்டஞ்சேனே
வானபரன் என்னோடிருப்பார்
வளை தடியும் கோலுமே தேற்றும்

3. பகைவர்க் கெதிரே ஒரு பந்தி
பாங்காய் எனக்கென்றேற் படுத்தி
சுக தைலம் கொண்டென் தலையை
சுபமாய் அபிஷேகம் செய்குவார்

4. ஆயுள் முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரம்பும்
நேயன் வீட்டினில் சிறப்போடே
நெடுநாள் குடியாய் நிலைத்திருப்பேன்

த. யோசேப்பு (நெய்யூர்)

32

ராகம் – ஆனந்தபைரவி D

தேவனே நான் உமதண்டையில் இன்னும்
நெருங்கி சேர்வதே என் ஆவல் பூமியில்
மாவலிய கோரமாக வன் சிலுவை மீதினில்
நான் கோவே தொங்க நேரிடினும்
ஆவலாய் உம்மண்டை சேர்வேன்

1. யாக்கோபைப்போல் போகும் பாதையில்
பொழுது பட்டு ராவில் இருள் வந்து மூடிட
துக்கத்தால் நான் கல்லில் சாய்ந்து
தூங்கினாலும் என் கனாவில்
நோக்கியும்மை கிட்டிச் சேர்வேன்
வாக்கடங்கா நல்ல நாதா!

2. பரத்துக்கேறும் படிகள் போலவே - என்
பாதை தோன்ற பண்ணும் ஐயா
எந்தன் தேவனே - கிருபையாக நீர்
எனக்கு தருவதெல்லாம் உமதண்டை
அருமையாய் என்னையழைக்கும்
அன்பின் தூதனாக செய்யும்

3. நித்திரையினின்று விழித்து காலை எழுந்து
கர்த்தாவே நான் உம்மைப் போற்றுவேன்
இத்தரையில் உந்தன் வீடாய்
என் துயர்க்கல் நாட்டுவேனே
எந்தன் துன்பத்தின் வழியாய்
இன்னும் உம்மைக் கிட்டிச் சேர்வேன்

4. ஆனந்தமாய் செட்டை விரித்து
பரவசமாய் ஆகாயத்தில் ஏறிப் போயினும்
வான மண்டலங் கடந்து
பறந்து மேலே சென்றிடினும்
மகிழ்வுறு காலத்திலும் நான்
மருவியும்மைக் கிட்டிச் சேர்வேன்

வே. சந்தியாகு ஐயர்

33

ராகம் – கர்நாடகாம்போதி E

தேன் இனிமையிலும் ஏசுவின் நாமம்
திவ்ய மதுரமாமே–அதைத் தேடியே நாடி
ஓடியே வருவாய் தினமும் நீ மனமே

1. காசினி தனிலே நேசமதாக
கஷ்டத்தை உத்தரித்தே - பாவ கடதை
அறுத்து சாபத்தைத் தொலைத்தார்
கண்டுணர் நீ மனமே

2. பாவியை மீட்கத் தாவியே உயிரை
தாமே ஈந்தவராம் - பின்னும்
நேமியாம் கருணை நிலைவரமுண்டு
நிதம் துதி என் மனமே

3. காலையில் பனிபோல் மாயமாய்
உலகம் உபாயமாய் நீங்கிவிடும்
என்றும் கர்த்தரின் பாதம்
நிச்சயம் நம்பு கருத்தாய் நீ மனமே

4. துன்பத்தில் இன்பம் தொல்லையில் நல்ல
துணைவராம் நேசரிடம் - நீயும்
அன்பதாய் சேர்ந்தால் அணைத்துனை
காப்பார் ஆசைகொள் நீ மனமே

5. பூலோகத்தாரும் மேலோகத்தாரும்
புகழ்ந்து போற்றும் நாமம் - அதைப்
பூண்டுகொண்டால் தான் பொன்னகர்
வாழ்வில் புகுவாய் நீ மனமே

A. சவரிமுத்து

34

ராகம் – செஞ்சுருட்டி D

நம்பி வந்தேன் மேசியா
நான் நம்பி வந்தேனே
திவ்ய சரணம்! சரணம்! சரணம்
ஐயா நான் நம்பி வந்தேனே

1. தம்பிரான் ஒருவனே தஞ்சமே தருவனே
வரு தவிது குமர குரு பரமனுவேலே
நம்பி வந்தேனே - நான்
2. நின் பாத தரிசனம் அன்பான கரிசனம்
நித நித சரி தொழுவ திதம் எனவும்
உறுதியில் நம்பி வந்தேனே - நான்
3. நாதனே கிருபை கூர் வேதனே சிறுமை தீர்
அதி நலம் மிகும் உனதிரு திருவடி
அருளே நம்பி வந்தேனே - நான்
4. பாவியில் பாவியே கோவியில்
கோவியே - கன பரிவுடன் அருள்புரி
அகல விடாதே நம்பி வந்தேனே - நான்
5. ஆதி ஒலோலமே பாதுகா காலமே உன
தடிமைகள் படுதுயர் அவதிகள் மெத்த
நம்பி வந்தேனே - நான்

வேதநாயகம் சாஸ்திரியார்

35 ராகம் - உசேனி E

பாதம் ஒன்றே வேண்டும் இந்தப் பாரில்
எனக்கு மற்றேதும் வேண்டாம் – உம்

1. நாதனே துங்கமெய் வேதனே பொங்கு நற்
காதலுடன் துய்ய தூதர் தொழுஞ் செய்யும்
2. சீறும் புயலினால் வாரிதி பொங்கிட
பாரில் நடந்தாற்போல் நீர்மேல் நடந்த உம்
3. வீசும் கமழ் கொண்ட வாசனை தைலத்தை
ஆசையுடன் மரி பூசிப் பணிந்த பொற்
4. போக்கிடமற்ற எம் ஆக்கினை யாவையும்
நீக்கிடவே மரந் தூக்கி நடந்த நற்
5. நானிலத்தோர் உயர் வான் நிலத்தேற–வல்
ஆணி துளைத்திடத் தானே கொடுத்த உம்
6. பாதம் அடைந்தவர்க் காதரவாய் பிரசாதம்
அருள் இயேசு நாதனே என்றும்–உம்

சு.ச. எரேமியா

36 ராகம் - சரசாங்கி F

பெத்தலையில் பிறந்தவரை
போற்றித்துதி மனமே – இன்னும்

1. சருவத்தையும் படைத்தாண்ட
சருவவல்லவர் - இங்கு தாழ்மையுள்ள
தாய்மடியில் தலை சாய்க்கலானார்
2. சிங்காசனம் வீற்றிருக்கும் தேவ மைந்தனார்
இங்கு பங்கமுற்ற பசுத்தொட்டிலில்
படுத்திருக்கிறார்
3. முன்னம் அவர் சொன்னபடி முடிப்பதற்காக
இங்கு மோட்சம் விட்டுத் தாழ்ச்சியுள்ள
முன்னணையிலே
4. ஆவிகளின் போற்றுதலால் ஆனந்தம்
கொண்டோர் - இங்கு ஆக்களுடைய
சத்தத்துக்குள் அழுது பிறந்தார்
5. இந்தளவாய் அன்பு வைத்த
எம்பெருமானை - நாம் எண்ணமுடன்
போய் துதிக்க ஏகிடுவோமே

ஜான் பால்மர்

37 ராகம் - தேசாரம் D

யூத ராஜசிங்கம் உயிர்த்தெழுந்தார்
உயிர்த்தெழுந்தார் நரகை ஜெயித்தெழுந்தார்

1. வேதாள கணங்கள் ஓடிடவே
ஓடிடவே உருகி வாடிடவே
2. வானத்தின் சேனைகள் துதித்திடவே
துதித்திடவே பரனைத் துதித்திடவே
3. மரணத்தின் சங்கிலிகள் தெறிபட்டன
தெறிபட்டன நொடியில் முறிபட்டன
4. எழுந்தார் என்ற தொனி எங்கும் கேட்குதே
எங்கும் கேட்குதே பயத்தை என்றும் நீக்குதே
5. மாதர் தூதரைக் கண்டக மகிழ்ந்தார்
அகமகிழ்ந்தார் பரனை அவர் புகழ்ந்தார்
6. மரித்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை
மரிப்பதில்லை இனி மரிப்பதில்லை
7. கிறிஸ்தோரே நாமவர் பாதம் பணிவோம்
பாதம் பணிவோம் பதத்தை சிரமணிவோம்

38 ராகம் - கரஹரப்பிரியை C

வரவேணும் எனதரசே
மனுவேல் இஸ்ரேல் சிரசே

அருணோதயம் ஒளிர் பிரகாசா
அசரீர் ஒரே சரு வேசா!

1. வேதா கருணா கரா மெய்யான பரா பரா
ஆதார நிராதரா அன்பான சகோதரா
தாதாவும் தாய் சகலமும் நீயே
நாதா உன் தாபரம் நல்குவாயே
2. படியோர் பவ மோசனா பரலோக
சிம்மாசனா முடியா தருள் போசனா
முதன் மா மறை வாசனா
இடையர் குடிலிடை மேவி எழுந்தாய்
இமையவர் அடி தொழு மேன்மையின் எந்தாய்
3. வானோர் தொழும் நாதனே மறையாகம
போதனே-கானாவின் அதிதனே கலிலேய
வினோதனே குணாகரமே நடு நிலை யோவா
நண்பா உனத நன்மையின் மகா தேவா!

வேதநாயகம் சாஸ்திரியார்

39 ராகம் - சங்கராபரணம் F

வாரும் ஐயா, போதகரே, வந்தெம்மிடம்
தங்கியிரும் – சேரும் ஐயா பந்தியிலே
சிறியவராம் எங்களிடம்

1. ஒளி மங்கி இருளாச்சே
உத்தமரே வாரும் ஐயா
கழித்திரவு காத்திருப்போம்
காதலனே கருணை செய்வாய்

2. நானிருப்பேன் நடுவிலென்றீர்
நாயன் உன் நாமம் நமஸ்கரிக்க
தாமதமேன் தயை புரிய,
தற்பரனே நலம் தருவாய்
3. மனக்கண்கள் மறைக்குதையோ
மன்னவனார் சமுகமதை
இமைப்பொழுதில் மறந்தீரே
ஏகுபரா வாருமையா
4. உந்தன் மனை திருச்சபையை
உலகமெங்கும் வளர்த்திடுவாய்
பந்தமற பரிகரித்தே
பாக்யம் அளித்தாண்டருள்வாய்

வேதநாயகம் சாஸ்திரியார்

40

ராகம் – பைரவி Em

ஸ்தோத்திரம் செய்வேனே இரட்சகனை (4)
பாத்திரமாக்க இம்மாத்ரம் கருணை வைத்த
பார்த்திபனை யூத கோத்திரனை என்றும்

1. அன்னை மரி சுதனை
புல்மீது அமிழ்துக் கழுதவனை (3)
முன்னணை மீதுற்ற சின்னக் குமாரனை
முன்னுரை நூற்படி இந்நிலத் துற்றோனை
2. கந்தை பொதிந்தவனை
வானோர்களும் வந்தடி பணிபவனை (3)
மந்தையர் கானந்த மாட்சி யளித்தோனை
வானபரன் என்னும் ஞான குருவானை
3. செம்பொன் னுருவானை
தேசிகர்கள் தேடும் குருவானை (3)
அம்பர மேவிய உம்பர் கணத்தோடு
அன்பு பெற நின்று பைம்பொன் மலர் தூவி

சத்தியநாதன் பிள்ளை

41

ராகம் – பைரவி C

விந்தை கிறிஸ்தேசு ராஜா
உந்தன் சிலுவை என் மேன்மை – 2
சுந்தரம் மிகும் இந்தப் பூவில்
எந்த மேன்மைகள் எனக்கிருப்பினும்

1. திரண்ட ஆஸ்தி, உயர்ந்த கல்வி
செல்வாக்குகள் மிக இருப்பினும்
குருசை நோக்கிப் பார்க்க எனக்கு
உரிய பெருமை யாவும் அற்பமே
2. உம் குருசே ஆசிக்கெல்லாம்
ஊற்றாம் வற்றா ஜீவ நதியாம்
துங்க இரத்த ஊற்றில் மூழ்கி
தூய்மையடைந்து மேன்மையாகினேன்
3. சென்னி விலா கை கானின்று
சிந்துதோ! துயரோடன்பு
மன்னா இதைப்போன்ற காட்சி
எந்நாளிலுமே எங்கும் காணேன்
4. இந்த விந்தை அன்புக்கீடாய்
என்ன காணிக்கை ஈந்திடுவேன்
எந்த அரும்பொருள் ஈடாகும்
என்னை முற்றிலும் உமக்களிக்கிறேன்

V. சந்தியாகு ஐயர் (மதுரை)

42

ராகம் – செஞ்சுருட்டி F

வேத புத்தகமே வேத புத்தகமே – வேத
புத்தகமே விலை பெற்ற செல்வம் நீயே

1. பேதைகளின் ஞானமே
பெரிய திரவியமே
பாதைக்கு நல் தீபமே
பாக்யர் விரும்பும் தேனே
2. என்னை எனக்கு காட்டி
என் நிலைமையை மாற்றி
பொன்னுலகத்தைக் காட்டி
போகும் வழி சொல்வாயே
3. துன்ப காலம் ஆறுதல்
உன்னால் வரும் நிஜமே
இன்பமாகுஞ் சாவென்றாய்
என்றும் நம்பின பேர்க்கே
4. பன்னிரு மாதங்களும்
பறித்துண்ணலாம் உன் கனி
உன்னை தியானிப்பவர்
உயர் கதி சேர்ந்திடுவார்

அருளானந்தம் ஐயர் (நெல்லை)

பாமாலைகள்

1

Key: E Henry F. Lyte

1. என்னோடிரும் மா நேச கர்த்தரே
வெளிச்சம் மங்கி இருட்டாயிற்றே
மற்றோர் சகாயம் அற்ற போதிலும்
நீங்கா ஒத்தாசை நீர் என்னோடிரும்
2. நீர் மேலே குமிழ் போல் என் ஆயுசும்
இம்மையின் இன்ப வாழ்வும் நீங்கிடும்!
கண் கண்ட யாவும் மாறி வாடிடும்
மாறாத கர்த்தர் நீர் என்னோடிரும்
3. நீர் கூட நின்று அருள் புரியும்
பிசாசின் கண்ணிக்கு நான் தப்பவும்
என் துணை நீர் என் தஞ்சமாயிரும்
இக்கட்டில் எல்லாம் நீர் என்னோடிரும்
4. நீர் ஆசீர்வதித்தால் கண்ணீர் விடேன்
நீரே என்னோடிருந்தால் அஞ்சிடேன்
சாவே எங்கே உன் கூரும் ஜெயமும்
நான் உம்மால் வெல்ல நீர் என்னோடிரும்
5. நான் சாகும் அந்தகார நேரத்தில்
உம் சிலுவையைக் காட்டும் சாகையில்
விண் ஜோதி வீசி இருள் நீக்கிடும்
வாழ்நாள் சாங்காலிலும் என்னோடிரும்

2

Key: D Edward Perronet

1. எல்லாருக்கும் மா உன்னதர்
கர்த்தாதி கர்த்தரே

 துதியும் ஆராதனையும் திருச்சபை மீண்டும் பெற வேண்டிய ஆசீர்வாதங்களாகும்.

மெய்யான தெய்வ மனிதர்
நீர் வாழ்க இயேசுவே!

2. விண்ணில் பிரதானியான நீர்
பாவிகட்காகவே
மண்ணில் இறங்கி மரித்தீர்
நீர் வாழ்க இயேசுவே!

3. பிசாசு பாவம் உலகை
உம் சாவால் மிதித்தே
ஜெயித்தடைந்தீர் வெற்றியை
நீர் வாழ்க இயேசுவே!

4. நீர் வென்றபடி நாங்களும்
வென்றேறிப் போகவே
பரத்தில் செங்கோல் செலுத்தும்
நீர் வாழ்க இயேசுவே!

5. விண்ணோர்களோடும் மண்ணுள்ளோர்
என்றைக்கும் வாழவே
பரம வாசல் திறந்தோர்
நீர் வாழ்க இயேசுவே!

3 Key: G Judson Van. De venter

1. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்
யாவையும் தாராளமாய்
என்றும் அவரோடு தங்கி
நம்பி நேசிப்பேன் மெய்யாய்

ஒப்புவிக்கிறேன் ஒப்புவிக்கிறேன்–நேச
இரட்சகா நான் யாவும் ஒப்புவிக்கிறேன்

2. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்
அவர் பாதம் பணிந்தேன்
லோக இன்பம் யாவும் விட்டேன்
இப்போதேற்றுக் கொள்ளுமேன்

3. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்
முற்றும் ஆட்கொண்டருளும்
நான் உம் சொந்தம் நீர் என் சொந்தம்
சாட்சியாம் தேவாவியும்

4. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்
நாதா அடியேனையும்
அன்பு பெலத்தால் நிரப்பி
என்னை ஆசீர்வதியும்

5. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்
திவ்ய ஜுவாலை வீசுதே
பூரண இரட்சை பேரானந்தம்
சதா ஸ்தோத்திரம் அவர்க்கே

4 Key: E John Newton

1. ஆச்சரிய கிருபை அதிசயம் அதன் தொனி
நீச பாவியாம் எனை மீட்டதே
தொலைந்து போன என்னையும்
தேடி அன்பாய் கண்டதே
குருடன் நான் இப்போது காண்கிறேன்

2. கிருபையே என் உள்ளம் பயந்திட போதித்ததே
கிருபையே என் பயம் நீக்கிற்றே
விலையேறப் பெற்றதாய்
தோன்றுதே உம் கிருபை
நான் உம்மை நம்பின அந்நேரமே

3. அபாயங்கள் சூழ்ச்சிகள்
கஷ்டங்கள் யாவினூடாய்
ஏராளமாய் கடந்து நான் வந்திட்டேன்
கிருபையே தம் மறைவினில்
என்னையும் காத்ததே
கிருபையே அக்கரை சேர்த்ததே

4. அக்கரை சேர்கையில்
பதினாயிரம் வருடங்கள்
பிரகாசிப்போம் நீதியின் சூர்யனால்
கர்த்தரை பாடியே போற்றுவோம் ஏகமாய்
முன் என்றும் இல்லாத மகிழ்ச்சியாய்

5 Key: C Fanny J. Crosby

1. இயேசுவை நம்பி பற்றிக் கொண்டேன்
மாட்சிமையான மீட்பைப் பெற்றேன்
தேவ குமாரன் இரட்சை செய்தார்
பாவியாம் என்னை ஏற்றுக் கொண்டார்

இயேசுவைப் பாடிப் போற்றுகிறேன்
நேசரைப் பார்த்து பூரிக்கிறேன்
மீட்பரை நம்பி நேசிக்கிறேன்
நீடூழி காலம் ஸ்தோத்திரிப்பேன்

2. அன்பு பாராட்டி காப்பவராம்
எந்தனைத் தாங்கி பூரணமாய்
இன்பமும் நித்தம் ஊட்டுகிறார்
இன்னும் நீங்காமல் பாதுகாப்பார்

3. மெய் சமாதானம் ரம்மியமும்
துய்ய தேவாவி வல்லமையும்
புண்ணிய நாதர் தந்து விட்டார்
விண்ணிலும் சேர்த்து வாழச் செய்வார்

4. என்னையே முற்றும் மாற்றிடவே
உன்னத பெலன் ஈந்தருளும்
கண்ணிகளில் நான் சிக்கிடாமல்
கண்மணி போல காத்தருளும்

6 Key: A William O. Cushing

1. பூவின் நற்கந்தம் வீசும் சோலையாயினும்
நல்ல தண்ணீர் ஓடும் பள்ளத்தாக்கிலேயும்
இயேசு நாதர் பின் சென்றேகி
மோட்சம் நாடுவேன் - விண்ணில்
சூடும் கிரீடம் நோக்கி ஓடுவேன்

பின் செல்வேனே மீட்பர் பின் செல்வேனே
எங்கேயும் எப்போதும் பின்னே செல்லுவேன்
பின் செல்வேனே மீட்பர் பின் செல்வேனே
இயேசு காட்டும் பாதையெல்லாம் செல்லுவேன்

2. கார்மேகம் மேலே மூடும் பள்ளமெங்கிலும்
காற்றகோரமாக மோதும் ஸ்தானத்திலும்
இயேசு பாதை காட்ட சற்றும்
அஞ்சவே மாட்டேன் - இரட்சகர்
கை தாங்க தைரியம் கொள்ளுவேன்

3. நாள்தோறும் இயேசுவை நான் கிட்டிச் சேருவேன்
மேடானாலும் காடானாலும்
பின்னே செல்லுவேன் - மீட்பர்
என்னை மோசமின்றி சுகமே காப்பார்
விண்ணில் நாசரோடு சேர்ந்து வாழ்விப்பார்
4. பின் சென்று நான் அக்கரை சந்திப்பேன்
அவர் அன்பாய் இவ்வேழையை
அணைப்பாரே - வானோரோடு
சேனையுடன் தங்க செய்குவார்
அங்கே துதித்தும் பாடி வாழுவேன்

7

Maine P. Ferguson

1. முற்றிலும் அழகானவர்;
எல்லோரிலும் மா சிறந்தோர்;
தேவாதி தேவனானவர்,
நேசக் கல்வாரி நாயகா

கல்வாரி நாயகா என் உள்ளம்
ஆட்கொண்டீர் – என்னை
மீட்க மரித்தீர் கல்வாரி நாயகா

2. காயப்பட்டு நொறுங்குண்டு
பாவம் துக்கம் சுமந்தோராய்
நீசச் சிலுவையில் மாண்டார்
துக்க கல்வாரி நாயகா
3. ஜீவன் சமாதானம் ஈய
சிறை பட்டோரின் மீட்புக்காய்
இரத்தமாம் ஊற்றைத் திறந்தார்
இரக்கக் கல்வாரி நாயகா
4. நமக்காய் பெற்ற வரங்கள்
சந்தோஷம் யாவும் நல்கிட
அன்பதாம் வெள்ளம் ஊற்றினார்
தயாளக் கல்வாரி நாயகா
5. உம்மை மகிமை மயமாய்
கண்டு களிப்பேன் என்பதே
இவ்வுலகில் என் ஆறுதல்
ஒப்பற்ற கல்வாரி நாயகா
6. கண்ணாடிக் கடல் ஓரமாய்
சேர்ந்து நின் அன்பில் மூழ்கியே
உம்மைப் போல் என்றும் இருப்பேன்
மகிமைக் கல்வாரி நாயகா

8

Key: Bb James L. Black

1. ஆண்டவா! பிரசன்னமாகி
ஜீவன் ஊதி உயிர்ப்பியும்
ஆசை காட்டும் தாசர் மீதில்
ஆசீர்வாதம் ஊற்றுவீர்

அருள்மாரி எங்கள் பேரில்
வருஷிக்கப் பண்ணுவீர்
ஆசையோடு நிற்கிறோமே
ஆசீர்வாதம் ஊற்றிடும்

2. தேவரீரும் பாதத்தண்டை
ஆவலோடே கூடினோம்
உந்தன் திவ்விய சுவிசேஷம்
நம்பி நாடி அண்டினோம்
3. ஆண்டவா மெய் பக்தர் செய்யும்
வேண்டுகோளை கேட்கிறீர்
அன்பின் ஏவலை எங்கள்
நெஞ்சில் இன்று மூட்டி நிற்கிறீர்
4. தாசர் தேடும் சுவிசேஷம்
இயேசுவே உட்சியும்
பெற்றுக்கொள்ளத்தின் திவ்ய
ஈவை தந்து ஆசீர்வதியும்
5. ஆண்டவா பிரசன்னமாகி
இவ்வேழைக்கும் இரங்கும்
உம் சமாதானத்தை ஈந்து
ஆசீர்வாதம் ஊற்றுமே

9

Key: C Thomas O Chisholm

1. நீர் உண்மையுள்ளவர்
என் அன்பின் தேவா
மாறாத கர்த்தரே நீர் என் பிதா
இரக்கத்தில் நீர் ஐசுவரியமுள்ளவர்
எந்நாளும் நீர் மாறாதவர்

நீர் உண்மையுள்ளவர்
உம் உண்மை பெரியது
காலை தோறும் புது இரக்கங்கள்
தேவை யாவும் உம் கரங்களால் பெற்றேன்
உம் உண்மை பெரிது என்னிடமாய்

2. உம் உண்மை இரக்கம் அன்பு கிருபை
எத்தனை மா திரள் என்பதற்கு
கோடை பனிகாலம் அறுப்பு யாவும்
சர்வ சிருஷ்டியும் சாட்சியாகும்
3. தேவ சமாதானம் பாவ மன்னிப்பும்
பரத்தின் நம்பிக்கை வைக்கிறீர்
உம் திவ்விய சமூகம் என்னை நடத்தி
ஆசீர்வதியுமென் அன்பின் தேவா!

10

Key: G Charles Wesley

1. கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்தியம் ஏறுதே
அவர் பாவ நாசகர் சமாதான காரணர்
மண்ணோர் யாரும் எழுந்து
விண்ணோர் போல் கெம்பீரித்து
பெத்லெகேமில் கூடுங்கள்
ஜென்ம செய்தி கூறுங்கள்

கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்தியம் ஏறுதே

2. வானோர் போற்றும் கிறிஸ்துவே
லோகம் ஆளும் நாதரே
ஏற்ற காலம் தோன்றினீர்
கன்னியிடம் பிறந்தீர்
வாழ்க நர தெய்வமே அருள் அவதாரமே!
நீர் இம்மானுவேல் அன்பாய்
பாரில் வந்தீர் மாந்தனாய்

3. வாழ்க சாந்த பிரபுவே
வாழ்க நீதி சூரியனே - மீட்பராக
வந்தவர், ஒளி, ஜீவன் தந்தவர்,
மகிமையை வெறுத்து
ஏழைக் கோலம் எடுத்து
சாவை வெல்லப் பிறந்தீர்
மறு ஜென்மம் அளித்தீர்

4. கேள் ஜென்மித்த ராயர்க்கே
மண்ணில் சமாதானமே
மனுஷர்மேல் பிரியம்
என்றென்றும் உண்டாகட்டும்
தூதர் சேனை பாடினார்
தேவ மைந்தன் பிறந்தார்
பூமியில் சந்தோஷமாம்
பூரிப்பாய் கொண்டாடுவோம்

11 Key: G Adelaide A. Pollard

1. உம் சித்தம் தேவா ஆகட்டுமே
நான் ஓர் மண்பாண்டம் உம் கரத்தில்
உம் பாதத்தண்டை காத்திருக்கும்
என்னை உம் சித்தப்படி மாற்றும்

2. உம் சித்தம் தேவா ஆகட்டுமே
என் இதயத்தை ஆராயுமே
உம் சமுகத்தில் தாழ்ந்திருக்கும்
என்னைக் கழுவிச் சுத்தம் செய்யும்

3. உம் சித்தம் தேவா ஆகட்டுமே
காயப்பட்ட என்னை நோக்குமே
எல்லாம் வல்ல என் ஆண்டவரே
என்னை தொட்டுக் குணப்படுத்தும்

4. உம் சித்தம் தேவா ஆகட்டுமே
முற்றிலும் என்னை ஆட்கொள்ளுமே
கிறிஸ்துவின் ஜீவன் வெளிப்படவே
என்னை உம் ஆவியால் நிரப்பும்

5. உம் சித்தம் தேவா ஆகட்டுமே
மெய் பாதை காட்டி நடத்துமே
நீர் தான் என் தெய்வம் பணிகிறேன்
என்னை உம்மோடு நித்தம் சேரும்

12 Key : A Elisa A. Hoffman

1. பரிசுத்தம் பெற வந்திட்டீர்களா
ஒப்பில்லா திரு ஸ்நானத்தினால்
பாவ தோஷம் நீங்க நம்பினீர்களா
ஆட்டுக் குட்டியின் இரத்தத்தினால்

மாசில்லா சுத்தமா
திரு புண்ணிய தீர்த்தத்தினால்
குற்றம் நீங்கி விட குணம் மாறிற்றா
ஆட்டுக் குட்டியின் இரத்தத்தினால்

2. பரலோக சிந்தை அணிந்தீர்களா
வல்ல மீட்பர் தயாளத்தினால்
மறு ஜென்ம குணமடைந்தீர்களா
ஆட்டுக் குட்டியின் இரத்தத்தினால்

3. மணவாளன் வரக் களிப்பீர்களா
தூய நதியின் ஸ்நானத்தினால்
மோட்ச கரை ஏறிச் சுகிப்பீர்களா
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்

4. மாசு கறை நீங்கும் நீச பாவியே
சுத்த இரத்தத்தின் சக்தியினால்
முக்தி பேறுண்டாக்கும் குற்றவாளியே
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்

5. மெய் சமாதானம் ஆறுதல் பெற்றீரா
தூய நதியின் ஸ்நானத்தினால்
தீய பாதை சுத்தமாக்கப்பட்டதா
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்

6. வாக்குத்தத்தத்தின் மேல் நிற்பேன் இயேசுவே
உந்தன் வார்த்தையின் வல்லமையால்
ஆசீர்வாதம் பெற்று உம்மில் ஜீவிப்பேன்
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்

7. வாஞ்சையோடு உம்மண்டை இயேசுவே
அண்டினேன் நல்ல இரத்தத்தினால்
நித்ய ஜீவன் பெற்று விண்ணில் வாழுவேன்
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்

13 Key: C John B. Dykes & Reginald Heber

1. தூயா தூயா தூயா! சர்வ வல்ல நாதா!
தேவரீர்க் கெந்நாளும் சங்கீதம் ஏறுமே
தூயா தூயா தூயா! மூவரான ஏகா!
காருண்யரே, தூய திரியேகரே!

2. தூயா தூயா தூயா! அன்பர் சூழ நின்று
தெய்வ ஆசனமுன்னர் தம் கிரீடம் வைப்பாரே
கேருபீன் சேராபீன் தாழ்ந்து போற்றப்பெற்று
இன்றென்றும் வீற்றாள்வீர், அநாதியே!

3. தூயா தூயா தூயா! ஜோதி பிரகாசா
பாவக் கண்ணால் உந்தன்
மாண்பைக் காண யார் வல்லோர்
நீரே தூய தூயர், மனோ வாக்குக் கெட்டா
மாட்சிமை தூய்மை அன்பும் நிறைந்தோர்

4. தூயா தூயா தூயா! சர்வ வல்ல நாதா!
வானம் பூமி ஆழி
உம்மை ஸ்தோத்திரிக்குமே
தூயா தூயா தூயா! மூவரான ஏகா!
காருண்யரே, தூய திரியேகரே!

14 Key: D Fanny Crosby

1. திவ்ய அன்பின் சத்தத்தை இரட்சகா
கேட்டு உம்மை அண்டினேன்
இன்னும் கிட்டி சேர என் ஆண்டவா
ஆவல் கொண்டிதோ வந்தேன்

இன்னும் கிட்ட கிட்ட சேர்த்துக்
கொள்ளுமேன் பாடுபட்ட நாயகா
இன்னும் கிட்ட கிட்ட சேர்த்துக்
கொள்ளுமேன் ஜீவன் தந்த இரட்சகா

2. என்னை முற்றுமே இந்த நேரத்தில்
சொந்தமாக்கி கொள்ளுமேன் - உம்மை

வாஞ்சையோடுந்தன் உள்ளத்தில்
நாடித் தேடச் செய்யுமேன்

3. திருப்பாதத்தில் தங்கும் போதெல்லாம்
பேரானந்தம் காண்கிறேன் - உம்மை
நோக்கி வேண்டுதல் செய்கையில்
மெய் சந்தோஷமாகின்றேன்

4. இன்னும் கண்டிராத பேரின்பத்தை
விண்ணில் பெற்று வாழுவேன்
திவ்ய அன்பின் ஆழமும் நீளமும்
அங்கே கண்டானந்திப்பேன்

15

Key: E Isaac Watts

1. நான் உம்மைப் பற்றி இரட்சகா!
வீண் வெட்கம் அடையேன்
பேரன்பைக் குறித்தாண்டவா
நான் சாட்சி கூறுவேன்

சிலுவையண்டையில்
நம்பி வந்து நிற்கையில்
பாவ பாரம் நீங்கி வாழ்வடைந்தேன்
எந்த நேரமும் எனதுள்ளத்திலும்
பேரானந்தம் பொங்கிப் பாடுவேன்

2. ஆ! உந்தன் நல்ல நாமத்தை
நான் நம்பி சார்வதால்
நீர் கைவிடீர் இவ்வேழையை
காப்பீர் தேவாவியால்

3. மா வல்ல வாக்கின் உண்மையை
கண்டுணர செய்தீர்
நான் ஒப்புவித்த பொருளை
விடாமல் காக்கிறீர்

4. நீர் மாட்சியோடு வருவீர்
அப்போது களிப்பேன்
ஓர் வாசஸ்தலம் கொடுப்பீர்
மெய் பாக்யம் அடைவேன்

16

Key : E C.W. Charles Fry

1. அன்புள்ள நேசர் இயேசு
எனக்கெல்லாம் அவரே
பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்
அவர் பள்ளத்தாக்கின் லீலி
எனக்கெல்லாம் அவரே
என் ஆத்துமத்தின் பிராண நாயகர்
துக்கத்தில் என் ஆறுதல்
துன்பத்தில் எனதின்பம்
என் கவலைகளெல்லாம் தாங்குவார்

அவர் பள்ளத்தாக்கின் லீலி
அவர் காலை விடிவெள்ளி
பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்

2. என் சஞ்சலங்கள் நீங்க
என் பாவம் மா அன்பாய்
சுமந்து அவர் ஜீவனை விட்டார்
நான் யாவையும் வெறுத்தேன்
என் நேச மீட்பர்க்காய்
அவர் ஒரு போதும் கை விடமாட்டார்
லோகம் என்னை வெறுத்து
சாத்தான் சோதித்தாலும்
மீட்பர் எனக்கு ஜெயம் தருவார்

3. கர்த்தாவின் சித்தத்துக்கு
கீழ்ப்படிவேனானால்
எல்லா துன்பத்தையும் ஜெயிப்பேன்
எனக்கு பயமென்ன
அவர் என் பங்கானார்
என் ஆத்துமத்தின் மன்னா இவரே
ஜீவ நதிகள் பாயும்
ராஜ்யத்தை சோலையில்
அவர் திரு முகத்தை நான் காண்பேன்

17

Key : D Wilbur F. Crafts

1. நான் பிரமித்து நின்று பேரன்பின்
பிரவாகத்தை நோக்கிப் பார்த்தேன்
என் உள்ளத்தில் மெய் சமாதானம்
சம்பூரணமாய் அடைந்தேன்

மா தூய உதிரத்தால்
என் பாவம் நீங்கக் கண்டேன்
இயேசையரின் இரட்சிப்பினால்
நான் ஆறுதல் கண்டடைந்தேன்

2. முன்னாளில் இவ்வாறுதல் காண
ஓயாமல் பிரயாசப்பட்டேன்
வீண் முயற்சி நீங்கின போதோ
என் மீட்பரால் அருள் பெற்றேன்

3. தம் கரத்தை என் மீதில் வைத்து
நீ சொஸ்தமாவாய் என்றனர்
நான் அவரின் வஸ்திரம் தொட
ஆரோக்கியம் அருளினார்

4. எந்நேரமும் புண்ணிய நாதர்
என் பக்கத்தில் விளங்குவார்
தம் முகத்தின் அருள் பிரகாசம்
என் பேரிலே வீசச் செய்வார்

5. நான் பிரமித்து நின்று பேரன்பின்
வல்லமை தனை உணர்ந்தேன்
அவ்வன்பதனின் சுவிசேஷம்
பிரஸ்தாபித்து வாழ்ந்திடுவேன்

18

Key: D Henry F Lyte

1. மீட்பரே! உம்மைப் பின்செல்ல
சிலுவையை எடுத்தேன்
ஏழை நான் பெரியோனல்ல
நீரே எல்லாம் நான் வந்தேன்

உம்மைப் பின்செல்வேன் என் சுவாமி
எனக்காக நீர் மரித்தீர் – எல்லாரும்
ஓடினாலும் உமதன்பால் நான் நிற்பேன்

2. பெற்றார் உற்றார் ஆஸ்தி கல்வி
மேன்மை லோகம் அனைத்தும்
அற்ப குப்பை என்று எண்ணி
வெறுத்தேனே முற்றிலும்

3. மெய்தான் லோகத்தார் பகைப்பார்
உம்மை முன் பகைத்தாரே
லோக ஞானிகள் நகைப்பார்
பயமேன் நீர் விடீரே!

4. சர்வ வல்ல தேவன் அன்பாய்
திடன் செய்வார் முன்செல்வேன்
தேவ துரோகிகள் மா வம்பாய்
சீறினாலும் நான் வெல்வேன்

19

Key : E — Fanny J. Crosby

1. இயேசுவே! கல்வாரியில்
என்னை வைத்துக்கொள்ளும்
பாவம் போக்கும் இரத்தமாம்
திவ்ய ஊற்றைக் காட்டும்

மீட்பரே! மீட்பரே!
எந்தன் மேன்மை நீரே!
விண்ணில் வாழுமளவும்
நன்மை செய்குவீரே!

2. பாவியான் கல்வாரியில்
இரட்சிப்பைப் பெற்றேனே
ஞான ஜோதி தோன்றவும்
கண்டு பூரித்தேனே

3. இரட்சகா! கல்வாரியின்
காட்சி கண்டோனாக
பக்தியோடு ஜீவிக்க
என்னை ஆள்வீராக

4. நேசரே கல்வாரியில் நீசன்
என்னை கண்டேன்
இன்னல் நீக்கும் நாதனாய்
இரத்தம் சிந்தி மாண்டீர்

5. இன்னமும் கல்வாரியில்
ஆவலாய் நிற்பேனே
பின்பு மோட்ச லோகத்தில்
என்றும் வாழுவேனே

6. தேவனே கல்வாரியில்
உன்ன்மயை கண்டேனே
என்னை மீட்கும் மீட்பராய்
துன்பம் சகித்தீரே

20

Key : D — Charlotte Elliott

1. நான் பாவி தான் ஆனாலும் நீர்
மாசற்ற இரத்தம் சிந்தினீர்
வா என்று என்னை அழைத்தீர்
என் மீட்பரே வந்தேன் வந்தேன்

2. நான் பாவி தான் என் நெஞ்சிலே
கறை பிடித்து கெட்டேனே
என் கறை நீங்க இப்போதே
என் மீட்பரே வந்தேன் வந்தேன்

3. நான் பாவி தான் பயத்தினால்,
அலைந்து பாவ பாரத்தால்
அமிழ்ந்து மாண்டு போவதால்
என் மீட்பரே வந்தேன் வந்தேன்

4. நான் பாவி தான் மெய்யாயினும்
சீர் நேர்மை செல்வம் மோட்சமும்
உம்மாலே பெற்று வாழவும்
என் மீட்பரே வந்தேன் வந்தேன்

5. நான் பாவி தான் இரங்குவீர்
அணைத்து காத்து இரட்சிப்பீர்
அருளாம் செல்வம் அளிப்பீர்
என் மீட்பரே வந்தேன் வந்தேன்

6. நான் பாவி தான் அன்பாக நீர்
நீங்கா தடைகள் நீக்கினீர்!
உமக்கு சொந்தம் ஆக்கினீர்!
என் மீட்பரே வந்தேன் வந்தேன்

21

Key : F — John Henry Newman

1. காரிருளில் என் நேச தீபமே
நடத்துமேன்... வேறொளியில்லை
வீடும் தூரமே நடத்துமேன்...
நீர் தாங்கின் தூர காட்சி ஆசியேன்!
ஓர் அடி மட்டும் என்முன் காட்டுமேன்

2. என் இஷ்டப்படி நடந்தேன் ஐயோ
முன்னாளிலே: ஒத்தாசை தேடவில்லை!
இப்போதோ நடத்துமேன்
உல்லாசம் நாடினேன் திகிலிலும்
வீம்பு கொண்டேன் அன்பாக மன்னியும்

3. இம்மட்டும் என்னை ஆசீர்வதித்தீர்;
இனிமேலும் காடாறு சேறு குன்றில்
தேவரீர் நடத்திடும்
உதய நேரம் வரக் களிப்பேன்
மறைந்து போன நேசரைக் காண்பேன்

22

Key-D — Charles C Luther

1. கரையேறி உமதண்டை
நிற்கும் போது ஆண்டவா
உதவாமல் பலனற்று
வெட்கப்பட்டு போவேனோ?

ஆத்மா ஒன்றும் இரட்சிக்காமல்
வெட்கத்தோடே ஆண்டவா
வெறுங்கையனாக உம்மை
கண்டு கொள்ளல் ஆகுமா?

2. ஆத்துமாக்கள் பேரில் வாஞ்சை
வைத்திராமல் சோம்பலாய்
காலம் கழித்தோர் அந்நாளில்
துக்கிப்பார் நிர்ப்பந்தராய்

3. தேவரீர் கை தாங்க சற்றும்
சாவுக்கஞ்சி கலங்கேன்
ஆயினும் நான் பலன் காண
உழைக்காமற் போயினேன்

4. அந்தகாரத்தால் நிறைந்து
சொஸ்தமின்றி வாழ்ந்தேனே
உம்மை சொந்தமாக தந்து
என்னை மீட்டுக் கொண்டீரே

5. வாழ்நாள் எல்லாம் வீண் நாளாக
சென்று போயிற்றே ஐயோ
மோசம் போனேன் விட்ட நன்மை
அழுதாலும் வருமோ
6. பக்தரே உற்சாகத்தோடு
எழும்பி பிரகாசிப்பீர்
ஆத்துமாக்கள் இயேசுவண்டை
வந்து சேர உழைப்பீர்

23

Key: F Sarah Flower Adams

1. உம்மண்டை தேவனே நான் சேரட்டும்
சிலுவை சுமந்து நடப்பினும்
என் ஆவல் என்றுமே
உம்மண்டை தேவனே (3) நான் சேரட்டும்
2. தாசன் யாக்கோபை போல் ராக்காலத்தில்
திக்கற்றுக்கல்லின் மேல் நான் துயில்கையில்
எந்தன் கனாவிலே உம்மண்டை தேவனே
உம்மண்டை தேவனே இருப்பேனே
3. நீர் என்னை நடத்தும் பாதையெல்லாம்
விண் எட்டும் ஏணி போல் விளங்குமாம்
தூதர் அழைப்பாரே உம்மண்டை தேவனே
உம்மண்டை தேவனே நான் சேர்வேனே
4. விழித்து உம்மையே நான் துதிப்பேன்
என் துயர் கல்லை உம் வீடாக்குவேன்
என் துன்பத்தாலுமே உம்மண்டை தேவனே
உம்மண்டை தேவனே நான் சேர்வேனே

24

Key: G Tr. Frederick Oakley

1. பக்தரே வாரும் ஆசை ஆவலோடும்
நீர் பாரும், நீர் பாரும், இப்பாலனை
வானோரின் ராஜன் கிறிஸ்து பிறந்தாரே
சாஷ்டாங்கம் செய்ய வாரும் (2)
சாஷ்டாங்கம் செய்ய வாரும் இயேசுவை
2. மேலோகத்தாரே மா கெம்பீரத்தோடு
ஜென்ம நற்செய்தி பாடி போற்றுமேன்
விண்ணில் சந்தோஷம்
மண்ணில் சமாதானம்
3. தேவாதி தேவா ஜோதியில் ஜோதி
மானிட தன்மை நீர் வெறுத்திலீர்
நித்ய குமாரன் ஒப்பில்லாத மைந்தன்
4. இயேசுவே வாழ்க இன்று ஜென்மித்தீரே
புகழும் துதியும் உண்டாகவும்
அன்பின் சொரூபி அருள் அவதாரம்

25

Key: F Philip Doddridge

1. என் பாவம் தீர்ந்த நாளையே
அன்போடு எண்ணி ஜீவிப்பேன்
அந்நாளில் பெற்ற ஈவையே
சந்தோஷமாய் கொண்டாடுவேன்
இன்ப நாள் இன்ப நாள்
என் பாவம் தீர்ந்து போன நாள்
பேரன்பர் என்னை ஆட்சித்தார்
சீராக் ஆன்மம் நல்கினார்
இன்ப நாள் இன்ப நாள்
என் பாவம் தீர்ந்து போன நாள்
2. இம்மானுவேல் இப்பாவியை
தம் சொந்தமாக்கி கொண்டனர்
சந்தேகம் நீக்கி மன்னிப்பை
தந்தென்னை அன்பாய் சேர்த்தனர்
3. என் உள்ளமே உன் மீட்பரை
என்றைக்கும் சார்ந்து வாழுவாய்
ஆருயிர் தந்த நாதரை
ஓர் காலும் விட்டு நீங்கிடாய்
4. ஆட்கொண்ட நாதா எந்தனை
நாடோறும் தத்தம் செய்குவேன்
பின் மோட்ச வீட்டில் பேரன்பை
இன்னோசையாலே பாடுவேன்

26

Key: A Carl G. Boberg

1. ஆ கர்த்தாவே! உம் கிரியை காணும்போது
சொல்லொண்ணா ஆச்சரியமடைந்தேன்
விண்மீன்களும் இடி முழக்கங்களும்
உம் வல்லமையை காட்டுகின்றதே
என் ஆத்மா பாடும் இரட்சகா தேவா
நீர் எத்தனை பெரியவர் – 2
2. சோலை, வனம், பூங்கா வழி செல்கையில்
பைங்கிளிகளின் பாடல் கேட்கையில்
மலையுச்சியின் மேல் நின்று கீழ்
நோக்குகையில் மென் காற்றருவியால்
மகிழ்ந்திருக்கையில்
3. பின்னும் பிதா தன் சுதனைக் குருசில்
தந்த விந்தை விளங்கவில்லை
என் பாவம் போக்கவே அவர் மரத்தில்
இரத்தம் சிந்தி ஜீவன் விட்டார் அந்தோ
4. ஒவ்வொரு நாளும் உன் கிருபையால்
உமது ஞானம் வியந்து மகிழுவேன்
உமது கிருபையால் என் பாவம் நீங்க-என்
விண்ணப்பம் உம் கரத்தில் வைத்தேன்
5. ஆர்ப்பரிப்போடவர் திரும்ப வந்து
விண் வீட்டில் சேர்க்கையில் மா ஆனந்தம்
அப்போ முன் வணங்கி பணிந்து நீரே
ஆ! எத்தனைப் பெரியவர் என்பேன்

27

Key: F Fanny J. Grasby

1. போற்றும் (2) புண்ணிய நாதரைப் போற்றும்
வானோர் கூடிப் பாடவும் இன்பமாய்
பாரிலேயும் நாம சங்கீர்த்தனம் செய்ய
மாந்தர் யாரும் வாரும் ஆனந்தமாய்
நேச மேய்ப்பன் கரத்தில் ஏந்துமாறு
இயேசு நாதர் நம்மையும் தாங்குவார்
போற்றும் (2) தேவ குமாரனைப் போற்றும்
பாதுகாத்து நித்தமும் போஷிப்பார்
2. போற்றும் (2) புண்ணிய நாதரைப் போற்றும்
பாவம் போக்க பாரினில் ஜென்மித்தார்

பாடுபட்டு பிராண தியாகமும் செய்து
வான லோக வாசலைத் திறந்தார்
மா கர்த்தாவே ஸ்தோத்திரம் என்றும் என்றும்
வாழ்க, வாழ்க ஜெகத்து இரட்சகா!
அருள் நாதா, மாசணுகா பரஞ்சோதி
வல்ல நாதா, கருணை நாயகா!

3. போற்றும் (2) புண்ணிய நாதரைப் போற்றும்
விண்ணும் மண்ணும் இசைந்து பாடவும்
போற்றும் போற்றும் மீட்பர் மகத்துவமாக
ஆட்சி செய்வார் நித்திய காலமும்
இயேசு ராஜா, மாட்சிமையோடு வந்து
இயேசு ஸ்வாமி பூமியில் ஆளுமேன்
லோகம் எங்கும் நீதியின் செங்கோலை ஒச்சி
ஜோதியாகப் பாலனம் பண்ணுமேன்

28

Key: G Augutus M. Toplady

1. பிளவுண்ட மலையே புகலிடம் ஈயுமே
பக்கம் பட்ட காயமும்
பாய்ந்த செந்நீர் வெள்ளமும்
பாவ தோஷம் யாவையும்
நீக்கும் படி அருளும்

2. எந்த கிரியை செய்துமே
உந்தன் நீதி கிட்டாதே
கண்ணீர் நித்தம் சொரிந்தும்
கஷ்ட தவம் புரிந்தும்
பாவம் நீங்க மாட்டாதே
நீரே மீட்பர் இயேசுவே

3. யாது மற்ற ஏழை நான்
நாதியற்ற நீசன் தான்
உம் சிலுவை தஞ்சமே
உந்தன் நீதி ஆடையே
தூய ஊற்றை அண்டினேன்
தூய்மையாக்கேல் மாளுவேன்

4. நிழல் போன்ற வாழ்விலே
கண்ணை மூடும் சாவிலே
கண்ணுக் கெட்டா லோகத்தில்
நடுத்தீர்வை தினத்தில்,
பிளவுண்ட மலையே புகலிடம் ஈயுமே

29

Key: D Dorothy A. Thrupp

1. இரட்சா பெருமானே பாரும்
புண்ணிய பாதம் அண்டினோம்
சுத்தமாக்கி சீரைத் தாரும்
தேடி வந்து நிற்கிறோம்
இயேசு நாதா இயேசு நாதா
உந்தன் சொந்தமாயினோம்

2. மேய்ப்பன் போல முந்திச் சென்றும்
பாதுகாத்தும் வருவீர்
ஜீவத் தண்ணீரண்டை என்றும்
இளைப்பாறச் செய்குவீர்
இயேசு நாதா இயேசு நாதா
மேய்ச்சல் காட்டிப் போஷிப்பீர்

3. நீதி பாதை தவறாமல்
நேசமாய் நடத்துவீர்
மோசம் பயமுமில்லாமல்
தாங்க செய்து தாங்குவீர்
இயேசு நாதா இயேசு நாதா
ஒரு போதும் கைவிடீர்

4. ஜீவ கால பரியந்தம்
மேய்த்தும் காத்தும் வருவீர்
பின்பு மோட்ச பேரானந்தம்
தந்து வாழச் செய்குவீர்
இயேசு நாதா இயேசுநாதா
ஊழி காலம் வாழ்விப்பீர்

30

Joseph Mohr

1. ஒப்பில்லா திரு இரா! இதில் தான் மா பிதா
ஏக மைந்தனை லோகத்துக்கு
மீட்பராக அனுப்பினது
அன்பின் அதிசயமாம் (2)

2. ஒப்பில்லா திரு இரா யாவையும் ஆளும் மா
தெய்வ மைந்தனார் பாவிகளை
மீட்டு விண்ணுக்குயர்த்த தம்மை
எத்தனை தாழ்த்துகிறார்

3. ஒப்பில்லா திரு இரா ஜென்மித்தார் மேசியா
தெய்வ தூதரின் சேனைகளை
நாமும் சேர்ந்து பராபரனை
பூரிப்பாய் ஸ்தோத்திரிப்போம்

4. ஒப்பில்லா திரு இரா தாழ்மையாய் ராஜனாய்
ஆதி அந்தமுமானவராய்
ஈசன் வார்த்தையாய் வந்து விட்டார்
வாழ்த்திப் போற்றிடுவோம்

31

1. எக்காள சத்தம் வானில் தொனிக்க
காண்போம் இயேசுவை எங்கள் முன்னே
பொறுமையுடன் காத்திருந்தோர் நாம்
கைவிடப்பட்டோர் தூங்கும் சிலர்

ஆத்ம மணாளன் ஆத்ம மணாளன்
வாரும் நல் இயேசு வாழ்த்துகிறோம்
அல்லேலூயா என்ன சந்தோஷம்
பறந்தே போவோம் பாட்டுடன் நாம்

2. பக்தரை சேர்க்க கள்ளன் போல் வாறார்
சுத்தர் மட்டுமே மாறிடுவார்
வானில் தூதர்கள் ஒன்றாக கூடி
பாட்டுடன் எக்காளம் தொனிப்பார்

3. விடிவெள்ளி நட்சத்திரம் போல்
அழகுமுள்ளோர் இன்பம் அவர்
மேன்மையுள்ளவர் வானில் உயர்ந்தோர்
எனக்காகவே பாடுபட்டோர்

4. இமைப்பொழுதில் சுத்தரெழுந்து
மறைந்தே போவார் இயேசுவுடன்
ஆ! இன்பக் கூட்டம் மேகத்தில் கூடி
சந்திப்போம் சீக்கிரம் இயேசுவையே

5. விண்ணில் சுத்தர்கள் கிரீடங்கள் பெற
விண் தூதர் காத்து நிற்கும் நாளில்
வெண் உடை தரித்த மணவாட்டி சபை
மேன்மை பெறும் நாள் இதோ! இதோ!

6. அல்லேலூயா ஆனந்தம் கொள்வோம்
அல்லேலூயா நாம் ஆர்ப்பரிப்போம்
அல்லேலூயா பாக்கியம் பெற்றோம்
அல்லேலூயா ஆமென் ஆமென்

32

Key: C William W. Walford

1. என் ஜெபவேளை வாஞ்சிப்பேன்
அப்போதென் துக்கம் மறப்பேன்
பிதாவின் பாதம் பணிவேன்
என் ஆசை யாவும் சொல்லுவேன்
என் நோவு வேளை தேற்றினார்
என் ஆத்ம பாரம் நீக்கினார்
ஒத்தாசை பெற்று தேறினேன்
பிசாசை வென்று ஜெயித்தேன்

2. என் ஜெபவேளை வாஞ்சிப்பேன்
மா தாழ்மையோடு பிரார்த்திப்பேன்
மன்றாட்டைக் கேட்போர் வருவார்
பேர் ஆசீர்வாதம் தருவார்
என் வாக்கின் மேல் விஸ்வாசமாய்
என் பாதம் தேடு ஊக்கமாய்
என் நோர்க்கென் நோவை சொல்லுவேன்
இவ்வேளையை நான் வாஞ்சிப்பேன்

3. என் ஜெபவேளை வாஞ்சிப்பேன்
ஆனந்தக் களிப்படைவேன்
பிஸ்காவின் மேலே ஏறுவேன்
என் மோட்ச வீட்டை நோக்குவேன்
இத்தேகத்தை விட்டேகுவேன்
விண் நித்ய வாழ்வைப் பெறுவேன்
பேரின்ப வீட்டில் வசிப்பேன்
வாடாத கிரீடம் சூடுவேன்

33

Frances R. Havergal

1. எந்தன் ஜீவன், இயேசுவே
சொந்தமாக ஆளுமே - எந்தன்
காலம் நேரமும் நீர் கையாடியருளும்

2. எந்தன் கை பேரன்பினால்
ஏவப்படும் எந்தன் கால் - சேவை
செய்ய விரையும் அழகாக விளங்கும்

3. எந்தன் நாவு இன்பமாய்
உம்மைப் பாடவுமென் வாய் - மீட்பின்
செய்தி கூறவும் ஏதுவாக்கியருளும்

4. எந்தன் சித்தம், இயேசுவே
ஒப்புவித்து விட்டேனே - எந்தன்
நெஞ்சில் தங்குவீர் அதை நித்தம் ஆளுவீர்

5. உந்தன் பாதம் பற்றினேன்
எந்தன் நேசம் ஊற்றினேன் - என்னையே
சமூலமாய் தத்தம் செய்தேன் நித்தமாய்

34

Key: A William Cowper

1. இம்மானுவேலின் இரத்தத்தால்
நிறைந்த ஊற்றுண்டே
எப்பாவத் தீங்கும் அதினால்
நிவிர்த்தியாகுமே

2. மா பாவியான கள்ளனும்
அவ்வூற்றில் மூழ்கினான்
மன்னிப்பும் மோட்சானந்தமும்
அடைந்து பூரித்தான்

3. அவ்வாறே நானும் இயேசுவால்
விமோசனம் பெற்றேன்
என் பாவம் நீங்கிப் போனதால்
ஓயாமல் பாடுவேன்

4. காயத்தில் ஓடும் இரத்தத்தை
விஸ்வாசத்தால் கண்டேன்
ஒப்பற்ற மீட்பர் நேசத்தை
எங்கும் பிரஸ்தாபிப்பேன்

5. விண் வீட்டில் வல்ல நாதரை
நான் கண்டு பூரிப்பேன்
அங்கென்னை மீட்ட நேசத்தை
கொண்டாடிப் போற்றுவேன்

35

Key: F Fanny crosby

1. அருள் ஏராளமாய் பெய்யும்
உறுதி வாக்கிதுவே
ஆறுதல் தேறுதல் செய்யும்
சபையை உயிர்ப்பிக்குமே

அருள் ஏராளம் அருள் அவசியமே
அற்பமாய் சொற்பமாய் அல்ல
திரளாய் பெய்யட்டுமே

2. அருள் ஏராளமாய் பெய்யும்
மேக மந்தாரமுண்டாம்
காடான நிலத்திலேயும்
செழிப்பும் பூரிப்புமாம்

3. அருள் ஏராளமாய் பெய்யும்
இயேசு வந்தருளுமேன்
இங்குள்ள கூட்டத்திலேயும்
கிரியை செய்தருளுமேன்

4. அருள் ஏராளமாய் பெய்யும்
பொழியும் இக்ஷணமே
அருளின் மாரியைத் தாரும்
ஜீவ தயாபரரே

5. அருள் ஏராளமாய் பெய்யும்
நானும் அக்கூட்டத்திலே
சேர்ந்தும்மை வாழ்த்தியே பாட
கிருபை தந்தருளுமேன்

36

Key: D Sanford F. Bennett

1. ஜோதி தோன்றும் ஓர் தேசமுண்டு
விசுவாசக் கண்ணால் காண்கிறோம்

நம் பிதா அழைக்கும் பொழுது
நாம் அங்கே வசிக்கச் செல்லுவோம்
இன்பராய் சுற்றிலே – மோட்சக்
கரையில் நாம் சந்திப்போம்(2)

2. அந்த வான் கரையில் நின்று நாம்
விண்ணோர் கீதங்களைப் பாடுவோம்
துக்கம் யாவும் அற்று மகிழ்ந்து
சுத்தரின் ஆறுதல் அடைவோம்

3. நம் பிதாவின் அன்பை நினைத்து
அவரில் மகிழ்ந்து பூரிப்போம்
மீட்பின் நன்மைகளை உணர்ந்து
அவரை வணங்கி துதிப்போம்

4. அந்த மோட்ச கரை அடைந்து
வான சேனையுடன் களிப்போம்
நம் தொல்லை யாத்திரை முடித்து
விண் கிரீடத்தை நாம் தரிப்போம்

5. சாவற்றோர் பூரிக்கும் தேசத்தில்
சந்திப்போம், பாடுவோம், ஆளுவோம்
துக்கம் நோவழிந்த ஸ்தலத்தில்
நலமாய் நாம் இளைப்பாறுவோம்

6. அங்கே நம் இரட்சகர் என்றென்றும்
ஆளுகை செய்து வீற்றிருப்பார்
துக்கம் நோய் சாவுகள் நீங்கிடும்
தேவன் நம் கண்ணீரைத் துடைப்பார்

7. என் உற்றார் போய் விட்டார் முன் அங்கே
ஆயின் நான் மீளவும் சந்திப்பேன்
அவர் கூட்டத்தில் நான் விண்ணிலே
ஒய்வற்ற பேரின்பம் கொள்ளுவேன்

8. ஏழைக்கும் மாளிகை இங்குண்டு
என்று நல் மீட்பர் அழைக்கிறார்
மாந்தர் யாவர்க்கும் இடமுண்டு
எல்லோரும் வாருங்கள் என்கிறார்

37 Key: G John H. Hopkins, Jr

1. ராயர் மூவர் கீழ் தேசம்
விட்டு வந்தோம் வெகு தூரம்
கையில் காணிக்கைகள் கொண்டே
பின் செல்வோம் நட்சத்திரம்
ஓ ஓ ராவின் ஜோதி நட்சத்திரம்
ஆச்சரிய நட்சத்திரம்
நித்தம் வழி காட்டி செல்லும்
உந்தன் மங்கா வெளிச்சம்

2. பெத்லகேம் வந்து ராஜாவே
உம்மை நித்ய வேந்தர் என்றே
கிரீடம் சூட்டும் நற்பொன்னையே
வைத்தேன் உம் பாதமே... ஓ - ஓ

3. தூப வர்க்கம் நான் ஈவேன்
தெய்வம் என்று தெரிவிப்பேன்
ஜெப தூபம் ஏறெடுப்பேன்
உம் பாதம் பணிவேன்... ஓ - ஓ

4. நானே வெள்ளைப் போளமே
கொண்டு வந்தேன் காட்டவுமே
துக்க பாவ பாரம் தாங்கி
மன்னிப்பார் இவரே... ஓ - ஓ

38 Key: G Joseph M. Scriven.

1. பாவ சஞ்சலத்தை நீக்க
பிராண சிநேகிதருண்டே
பாவ பாரம் தீர்ந்து போக
மீட்பர் பாதம் தஞ்சமே
சால துக்க துன்பத்தாலே
நெஞ்சம் நொந்து சோருங்கால்
துன்பம் இன்பமாக மாறும்
ஊக்கமான ஜெபத்தால்

2. கஷ்ட நஷ்டம் உண்டானாலும்
இயேசுவண்டை சேருவோம்
மோச நாசம் நேரிட்டாலும்
ஜெப தூபம் காட்டுவோம்
நீக்குவாரே நெஞ்சின் நோவை
பெலவீனம் தாங்குவார்
நீக்குவாரே மன சோர்வை
தீய குணம் மாற்றுவார்

3. பெலவீனமான போதும்
கிருபாசனமுண்டே - பந்து ஜனம்
சாகும் போதும் புகலிடம் இதுவே
ஒப்பில்லாத பிராண நேசா!
உம்மை நம்பி நேசிப்போம்
அளவற்ற அருள் நாதா!
உம்மை நோக்கி கெஞ்சுவோம்

39 Key: D Johnson Oatman

1. துன்பம் உன்னை சூழ்ந்தலைக்
கழித்தாலும் இன்பம் இழந்தேன்
என்றெண்ணி சோர்ந்தாலும்
எண்ணிப்பார் நீ பெற்ற பேராசீர்வாதம்
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்
எண்ணிப்பார் நீ பெற்ற பாக்யங்கள்
கர்த்தர் செய்த நன்மைகள் யாவும்
ஆசீர்வாதம்! என்னு ஒவ்வொன்றாய்
கர்த்தர் செய்த யாவும் வியப்பை தரும்

2. கவலை சுமை நீ சுமக்கும் போதும்
சிலுவை உனக்குப் பளுவாகும் போதும்
எண்ணிப்பார் நீ பெற்ற பேராசீர்வாதம்
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்

3. நிலம் பொன்னுள்ளோரை நீ பார்க்கும் போது
நினை கிறிஸ்துவின் ஐசுவரியம் உண்டுனக்கு
பணம் கொள்ளா பேராசீர்வாதத்தைப் பார்
பரலோக பொக்கிஷமும் வீடும் பார்

4. அகோர துன்பங்கள் உன்னைச் சூழ்ந்தாலும்
அதைரியப்படாதே கர்த்தர் உன் பக்கம்
அநேகமாம் நீ பெற்ற சிலாக்கியங்கள்
தூதர் உன்னை தேற்றுவார் பிரயாணத்தில்

5. அவர் வேளை வரும் போது அன்போடு
உந்தன் குறைகளை நிறைவாக்குவார்
நீயோ வேளை வழியையும் குறிக்காதே
எல்லாவற்றையும் செம்மையாய் செய்குவார்

40 Key: D Nahum Tate

1. ராக்காலம் பெத்லேம் மேய்ப்பர்கள்
தம் மந்தை காத்தனர்
கர்த்தாவின் தூதன் இறங்க
விண் ஜோதி கண்டனர்
2. அவர்கள் அச்சங்கொள்ளவும்
விண் தூதன்: திகில் ஏன்?
எல்லாருக்கும் சந்தோஷமாம்
நற்செய்தி கூறுவேன்
3. தாவீதின் வம்சம் ஊரிலும்
மெய் கிறிஸ்து நாதனார்
பூலோகத்தார்க்கு இரட்சகர்
இன்றைக்குப் பிறந்தார்
4. இதுங்கள் அடையாளமாம்
முன்னணை மீது நீர்
கந்தை பொதிந்த கோலமாய்
அப்பாலனைக் காண்பீர்
5. என்றுரைத்தான் அக்ஷணமே
விண்ணோராம் கூட்டத்தார்
அத்தூதனோடு தோன்றியே
கர்த்தாவைப் போற்றினார்
6. மா உன்னதத்தில் ஆண்டவா
நீர் மேன்மை அடைவீர்
பூமியில் சமாதானமும்
எல்லோர்க்கும் ஈகுவீர்

41 Key: G J. Raj/Lewis E. Jones

1. பாவ பாரம் நீங்க மனதுண்டா
வல்லமை உண்டு இயேசு இரத்தத்தில்
தீமையை வென்று நீ ஜெயிப்பாயா
உண்டு அற்புத சக்தி இரத்தத்தில்
வல்லமை உண்டு உண்டு அற்புத வல்லமை
ஆயேசுவின் இரத்தத்தில்
வல்லமை உண்டு உண்டு அற்புத வல்லமை
ஆட்டுக் குட்டியின் இரத்தத்தினால்
2. துர் இச்சை அகந்தை நீ வெல்லுவாயா
வல்லமை உண்டு இயேசு இரத்தத்தில்
கல்வாரி ஊற்றில் நீ மூழ்குவாயா
உண்டு அற்புத சக்தி இரத்தத்தில்
3. தூய வெண்மையாக விருப்பமா
வல்லமை உண்டு இயேசு இரத்தத்தில்
கறையாவும் தீரும் அஜ்ஜீவ ஊற்றில்
உண்டு அற்புத சக்தி இரத்தத்தில்
4. இயேசென்னும் ராஜனை சேவிப்பாயா
வல்லமை உண்டு இயேசு இரத்தத்தில்
தினம் அவர் துதி பாடி ஜீவிப்பாயா
உண்டு அற்புத சக்தி இரத்தத்தில்

42 Key: C Isaac watts

1. ஆர்ப்பரிப்போம் இந்நன்னாளில்
கிறிஸ்தேசு ஜெனித்ததால்
விண் மண்ணோரும் எவ்வான்மாவும்
என்றென்றும் பாடிடவே (2)
எனறென்றும் என்றென்றும் பாடிடவே
2. ஆர்ப்பரிப்போம் இந்நான்னாளில்
நம் மீட்பர் ஜெனித்ததால்
வான்பூமியும் சிருஷ்டிகரும்
என்றென்றும் போற்றிடவே (2)
என்றென்றும் என்றென்றும் போற்றிடவே
3. உன்னதத்தில் மகிமையும்
பூமியில் சமாதானமும்
மனிதர் மேல் அன்பும் நிலைத்து நிற்கவும்
நம் மீட்பர் ஜென்மித்தார் (2)
நம் மீட்பர் இயேசு ஜென்மித்தார்

43 Key: G William Williams

1. பாதை காட்டும் மா யேகோவா
பரதேசியான நான் - பலவீனன்
அறிவீனன் இவ்வுலகம் காடு தான்
வானாகாரம் வானாகாரம்
தந்து என்னைப் போஷியும்
2. ஜீவ தண்ணீர் ஊறும் ஊற்றை
நீர் திறந்து தாருமேன் - தீப மேக
ஸ்தம்பம் காட்டும் வழியில் நடத்துமேன்
வல்ல மீட்பர் வல்ல மீட்பர்
என்னைத் தாங்கும் இயேசுவே
3. காரிருளால் மூடப்பட்ட
பர்வதங்கள் மேலே பார் - வாக்குத்தத்தம்
பண்ணப்பட்ட ஜோதி தோன்ற செய்கிறார்
ஆதலால் நீ ஆதலால் நீ
நெஞ்சமே மகிழ்ச்சி கொள்
4. கர்த்தர் காட்டும் பாதை தானே
என்றுமது நல்லது - சற்று நேர்
இடுக்காயினும் விண் வீடு சேர்க்குமே
நல்ல கர்த்தா நல்ல கர்த்தா
உம்மையே வணங்குவேன்
5. எந்தன் சித்தம் ஆபத்தாகும்
உந்தன் சித்தம் நாடுவேன்
மாந்தர் தேடும் தேவ ராஜ்யம்
செல்லும் பாதை காட்டிடும்
தூய தேவா தூய தேவா
உமக்காக ஜீவிப்பேன்
6. சாவின் அந்தகாரம் வந்து
என்னை மூடும் நேரத்தில்
சாவின் மேலும் வெற்றி தந்து
சேர்த்திடுமே மோட்சத்தில்

கீத வாழ்த்தல் கீத வாழ்த்தல்
உமக்கென்றும் பாடுவேன்

44

F.B.P.

1. எருசலேம் என் ஆலயம்
ஆசித்த வீடதே - நான் அதைக்
கண்டு பாக்கியம் அடைய வேண்டுமே-3

2. பொற்தளம் போட்ட வீதியில்
எப்போதுலாவுவேன்? - பளிங்காய்
தோன்றும் ஸ்தலத்தில் எப்போது பணிவேன்

3. எந்நாளும் கூட்டம் கூட்டமாய்
நிற்கும் அம்மோட்சத்தார் - கர்த்தாவை
போற்றிக் களிப்பாய் ஓய்வின்றிப் பாடுவார்

4. நானும் அங்குள்ள கூட்டத்தில்
சேர்ந்தும்மைக் காணவே - வாஞ்சித்து
லோக துன்பத்தில் களிப்பேன் இயேசுவே

5. எருசலேம் என் ஆலயம்
நான் உன்னில் வாழுவேன் - என் ஆவல்
என் அடைக்கலம் எப்போது சேருவேன்

45

Key: C Isaac Watts

1. கர்த்தாவே யுகயுகமாய்
எம் துணை ஆயினீர் - நீர் இன்னும்
வரும் காலமாய் எம் நம்பிக்கை ஆவீர்

2. உம் ஆசனத்தின் நிழலே
பக்தர் அடைக்கலம் - உம்
வன்மையுள்ள புயமே நிச்சய கேடகம்

3. பூலோகம் உருவாகியே
மலைகள் தோன்றுமுன் - சுயம்புவாய்
என்றும் நீரே மாறா பராபரன்

4. ஆயிரம் ஆண்டு உமக்கு
ஓர் நாளைப் போலாமே - யுகங்கள்
தேவரீருக்கு ஓர் இமைக்கொப்பாமே

5. சாவுக்குள்ளான மானிடர்
நிலைக்கவே மாட்டார் - உலர்ந்த
பூவைப்போல் அவர் உதிர்ந்து போகிறார்

6. உம்மாலே வருஷாந்தரம்
பிழைத்து வாழ்கிறோம் - உம்மாலே
நாங்கள் விக்கினம் வந்தாலும் தப்பினோம்

7. கர்த்தாவே யுகயுகமாய்
எம் துணை ஆயினீர் - இக்கட்டில்
நற் சகாயராய் எம் நித்ய வீடாவீர்

46

Key: F Isaac Watts

1. என் அருள் நாதா இயேசுவே
சிலுவைக் காட்சி பார்க்கையில்
பூலோக மேன்மை நஷ்டமே
என்றுணர்ந்தேன் என்னுள்ளத்தில்

2. என் மீட்பர் சிலுவை அல்லாமல்
வேறெதை நான் பாராட்டுவேன்
சிற்றின்பம் யாவும் அதனால்
நஷ்டமென்று தள்ளுவேன்

3. கை தலை காலிலும் இதோ
பேரன்பும் துன்பும் கலந்தே
பாய்ந்தோடும் காட்சி போல் உண்டோ
முள் முடியும் ஒப்பற்றதே

4. மாந்தர்க்கு மீட்பைக் கர்த்தனாய்
சம்பாதித் தீந்த இயேசுவே
உமக்கு என்றும் தாசராய்
மா ஸ்தோத்திரம் உண்டாகவே

5. சராசரங்கள் அனைத்தும்
அவ்வன்புக்கு எம்மாத்திரம்
என் ஜீவன் சுகம் செல்வமும்
என் நேசருக்குப் பாத்திரம்

47

**கடல் கொந்தளித்து பொங்க
கப்பல் ஆழச் செல்கையில்
புயல் காற்று சீறி வீச—பாய் கிழிந்து
போகையில் இயேசு எங்களிடம் வந்து
கப்பலோட்டியாயிரும்
காற்றமர்த்தி துணை நின்று
கரை சேர செய்திடும்**

1. கப்பல் ஏறி செல்வோர்க்கு போவோருக்கு
கடும் மோசம் வரினும்
இடி மின் முழக்கம் காற்று
உமக்கெல்லாம் அடங்கும்-இருளில்
நீர் பரஞ்சோதி வெளிச்சம் நீர் நிழலே
யாத்திரையில் திசை காட்டி
சாவில் எங்கள் ஜீவனே

2. எங்கள் உள்ளம் உம்மை நோக்கும்
இன்ப துன்ப காலத்தில்
எங்கள் ஆவி உம்மில் தங்கும்
இகபர ஸ்தலத்தில்-இயேசு
எங்களிடம் வந்து கப்பலோட்டியாயிரும்
காற்றமர்த்தி துணை நின்று
கரை சேர செய்திடும்

3. கடல் கொந்தளித்துப் பொங்க
கப்பல் ஆழ செல்கையில்
ஜெய கீதம் பாடி போற்றி
உம் சமுகம் வேண்டுவோம்
இயேசு எங்களிடம்
வந்து கப்பலோட்டியாயிரும்
காற்றமர்த்தி துணை நின்று
கரை சேரச் செய்திடும்

RC SONGS

1

உம் புகழைப் பாடுவது
என் வாழ்வில் இன்பமையா
உம் அருளைப் போற்றுவது
என் வாழ்வின் செல்வமையா

1. துன்பத்திலும் இன்பத்திலும்
நல் தந்தையாய் நீ இருப்பாய்
கண்ணயரக் காத்திருக்கும்
நல் அன்னையாய் அருகிருப்பாய் -2
அன்பு என்னும் அமுதத்தினை
நான் அருந்திட எனக்களிப்பாய்
உன் நின்று பிரியாமல்
நீ என்றும் அணைத்திருப்பாய் -2

2. பல்லுயிரைப் படைத்திருப்பாய்
நீ என்னையும் ஏன் படைத்தாய்
பாவத்திலே வாழ்ந்திருந்தும்
நீ என்னையும் ஏன் அழைத்தாய்
அன்பினுக்கு அடைக்குந் தாழ்
ஒன்று இல்லை என்றுணர்ந்தேன்
உன் அன்பை மறவாமல்
நான் என்றும் வாழ்ந்திருப்பேன்

Father. ஜான் குழந்தை

2

என் இயேசுவே உம்மை நான்
மறவேன் மறவேன்
எந்நாளும் உம் அருளை
நான் பாடி மகிழ்ந்திருப்பேன்

